535

சந்திரோதயம்

29 APR 1941
MADRAS
SCANNED

ஸ்ரீமதி M. V. ராஜம்மா

1-5-41

உள்நாடு விலை அணா ஒன்று
வெளிநாடு விலை சதம் எட்டு

போட்டியின் சரியான விடையைப் போர்டில் எழுதிய பிறகு திருத்தப்படும் விதம்.

இனும் ! இனும் !! இனும் !!!

ரூ. 1,000 இனும்.

தங்கம்

தோலா எடை ரூ. 2½

ஆச்சர்யமான பிரபல

லண்டன் புதிய தங்கம்

ஒரு முறை பரீக்ஷித்தால் திருப்தி அடைவீர்கள்.

B. பிரமநந்து சாகிப், நாயா பஜார், டெல்லியிலிருந்து பின்வருமாறு எழுதுகிறார் :—

தாங்கள் அனுப்பிய புதிய தங்கம் பார்சல் கிடைத்தது. வந்தனம். இந்தத் தங்கத்திற்கும் அசல் தங்கத்திற்கும் யாதொரு வித்தியாசமும் காணப்படாததைப் பற்றி ரொம்பவும் ஆச்சர்யப்படுகிறேன். உடன் மறு தபாலில் 6 தோலா தங்கம் அனுப்பி வைக்கவும். மேன்மேலும் ஆர்டர் அனுப்பி வைக்கிறேன்.

இந்தத் தங்கம் உரை கல்லின்மீது நிஜத் தங்கத்தின் மாற்றையே காண்பிக்கிறது. இதை கம்பியாகவும் இழுக்கலாம். தட்டுகளாகவும் அடிக்கலாம். எல்லாவிதமான ஆபரணங்களும் செய்யலாம். கைதேர்ந்த தட்டார்களும் இதை நிஜத் தங்கம் என்றே மதிக்கிறார்கள். இந்த சர்டிபிகேட் பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1,000 இனும்.

இதை பிராபல்யப்படுத்தும் நோக்கத்துடன் இதன் விலை தோலா எடை ரூ. 2½ ஆக குறைத்திருக்கிறோம். தபால் செலவு தனி. 3 தோலா விலை ரூ. 7/- 6 தோலா விலை ரூ. 13/- 15 தோலா விலை ரூ. 30/- 40 தோலா விலை ரூ. 70/-

திருப்தி இல்லையேல் பணம் வாபஸ் செய்யப்படும்.

இனும் ஒரே தடவையில் 3 தோலா வாங்குபவர்களுக்கு பார்சல் பாக்கிங் சார்ஜ் இல்லாமலும், 6 தோலா வாங்குபவர்களுக்கு பாக்கிங் சார்ஜ் தபால் செலவு இல்லாமலும் அனுப்பப்படும். 15 தோலா ஒரே தடவையில் வாங்கினால் 24-மணிக்கு ஒருமுறை சாவி கொடுத்து ஓடக்கூடிய 10 வருஷம் உத்திரவாதமுள்ள கடிகாரம் பாக்கிங் சார்ஜ் தபால் செலவு, இல்லாமல் அனுப்பப்படும்

Sole Distributors :—

M/s. London Commercial Co.

Post Box No. 27 (C. T. M. 2.) Amritsar, (India) No. 2.

முன் விலை ரூ. 7—8—0

இப்பொழுது பாதி விலை ரூ. 3—12—0

ரோல்ட்கோல்டு ரிஸ்ட் வாட்சு நெ. 44 ரூ. 3—12—0



படத்தில் காண்பதுபோல் மிக்வும் அழகான கைக்கெடியாரங்கள் உயர்ந்த ஸ்விஸ் மேக்கர் லீவர் மூமெண்ட் உள்ளது. உறுதியான சாமான்களால் தயார் செய்யப்பட்டது. சரியான மணியைக் காட்டும். இந்த லீவர் கெடியாரம் வாங்கினால் என்றும் ரிப்பேர் கவலையில்லாமல் இருக்கும். பார்வைக்கு அசல் தங்கக் கெடியாரம் போல் கையில் கட்டிக்கொள்வோருக்கு வெகு அழகுள்ளது. இதில் காட்டியபடி எந்த மாதிரி (Round, Square, Rectangular shapes) கெடியாரங்கள் வேண்டுமானாலும் அனுப்பப்படும். குறைந்த விலை ரூ. **3—12—0** 3 வருஷம் கியாரெண்ட். சீக்கிரம் முந்துங்கள்.

வெஸ்ட்ரான் ஸ்விஸ் வாட்ச் கம்பேனி,
போஸ்ட் பாக்ஸ் நெ. **68**, ஜி. டி. மதருஸ்.

WESTERN SWISS WATCH Co.,
Direct Importers, Post Box No. 68. G. T. MADRAS.

இதோ புதியசக்தி!

இதற்காக அதிகச் சிலவுமில்லை

சி. எம். சாமி

மன்மதக் குளிகை

உங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறது

இதில் தாதுவிருத்தியைத் தரக்கூடிய அநேக சரக்குகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இது உடலில் ஒருவித நூதன சக்தியை உண்டாக்கி, நரம்புகளை முறுக்கேற்றி சரீரத்தின் எல்லாப் பாகங்களையும் வலுப்பெறச் செய்கிறது. மேகச்சூடு, குத்து, குடைச்சல், இடுப்புவலி, பலவீனம், ஆயாசம், தாகம், இருதயத்துடிப்பு, தாது நஷ்டம், முதலியவைகளை நீக்கி, இந்திரியத்தை மணிபோல் கட்டி, பலம், மனோற்சாகம் முதலியவைகளையும் உண்டாக்குகிறது.

20 குளிகை விலை ரூ. 2—0—0.

தலைமைஆபீஸ்: **மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.** S.I

பிராஞ்சு:—(1) 2/88, அய்யா முதலி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.
,, (2) 195, செட்டியார் தெரு, கொழும்பு.
,, (3) கதிரேசன் கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

சந்திரோதயம்

PHONE 2572

60, தம்புசெட்டி தெரு + மதராஸ்.

மாதமிருமுறை 1, 15 தேதிகளில் வெளிவரும்

"தொட்டனைத் தூறு மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" — குறள்

ஆசிரியர் ஜி. ஆர். நாதன்

ஆரம். 5	சென்னை 1941௵ மே௴ 1௳	முத்து. 19

பொருளடக்கம்

			பக்கம்
பழைய குருடி	...	...	4
என்ன சங்கதி?	...	...	9
பிரசாரம்	...	அ. வே. ஜெ.	12
பக்கிரி வளர்த்த பசு	...	"அமுதன்"	17
பழிக்குப் பழி	...	கே. வி. ஜ.	19
பேய்க் காற்று	...	ஜி. டி. எஸ்.	23
சகட யோகம்	...	எஸ். சுப்பிரமணியன்	27
பாக்யசாலி	...	என். எஸ். ஸ்ரீ.	30
தெருக் காதலர்	...	வி. ஆர்.	33
இயற்கை யின்பம்	...	"இளவலவன்"	37
பார்வைக்கு வந்தவை	...	...	40

குறிப்பு:—இப் பத்திரிகையில் வெளிவரும் கட்டுரைகள், கதைகளில் காணப்பெறும் பெயர்கள் யாவும் கற்பனையே; அவை யாரையும் குறிப்பிடுவனவல்ல

பழைய குருடி

'இந்தியா மந்திரி' அமெரி மறுபடியும் பேசினர். என்ன பேசினர்? என்னதான் பேசுவார்? "இந்தியாவுக்கு ஜனநாயக ஆட்சி இல்லை" என்றுதான் பேசினர். மறுபடியும் திருப்பித் திருப்பி இதையே கூறுவதற்கு இந்தியாவில் என்ன நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். பம்பாயில் நடந்த மிதவாதக் கட்சியின் கூட்டம் ஒரு காரணம்; தன் ஆதிக்கத்திலுள்ள 20 கோடி மக்களின் மீது இன்னும் ஒரு வருஷ காலம் தன்னுடைய ஏதேச்சாதிகாரத்தை நீடிக்கச் சந்தர்ப்பம் வாய்த்தது மற்ருேர் காரணம். இக் காரணங்கள்தான் பார்லிமெண்ட் சபையைக் கூட்டச் செய்தன.

"இந்தியாவில் புகுத்தப் போகும் ஆட்சி முறையைப்பற்றி இப்பொழுது நான் கூறுவதற்கில்லை. ஆகஸ்டு மாதத்தை எதிர் பாருங்கள்" என்று சினிமாப்பட விளம்பரம் செய்கிருர் அமெரி. ஆனல் இன்று அவர் பேசியதிலிருந்து 'ஆகஸ்டு திட்டம்' எவ் விதமிருக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக் கனி போலத் தெரி கிறது. "யுத்தத்தால் ஏற்படும் சிரமங்களுக்கு இடையே நாம் இப்படிப் பட்ட பெரிய மாறுதலை அங்கீகரிக்க முடியாது. அவ் விதம், சாப்ரு கட்சியார் கூறும் அரசியல் திட்டத்தை ஏற்றுக் கொண்டால் உள் நாட்டில் சிக்கலான பிரச்னைகள் எழும்பும்" எனக் கூறுகிருர். ஆஹா! இவருக்கு இந்தியாவின்மீது எவ்வளவு அக்கரை! இதிலிருந்தே 'ஆகஸ்டு திட்டம் ஓர் வீண் வாய் சவடால்' என அறிந்து கொள்ளாமல் இருக்க முடியாது.

இவ்விதமே பேசிக் கொண்டிருக்கும் ஒரு ஆசாமியைத் தான் எல்லோரும் 'இந்தியா மந்திரி' எனக் கூறுகிருர்கள். இது ஆச்சர்யமாகத்தான் இருக்கிறது. ஒரு நாட்டின் மந்திரி அந் நாட்டைப்பற்றி அமெரி பேசுகிற ஹோதாவில் பேசுவாரா, மாட்டவே மாட்டார். பின் அவர் யார்? அடிமை நாடான இந் தியாவை பிரிட்டிஷ் ஆதிக்கத்திலே வைத்துக் கொள்ள விரும் பும் ஆசாமிதான், என்று நினைக்க வேண்டியதுதான். ஆனல் அமெரியைப் போலவே எல்லா ஆங்கிலேயர்களும் இருக்க மாட் டார்களென்று கன்ஸர்வேடிவ் மெம்பர் ஸர். ஸ்டான்லி ரீட் பேசி யதிலிருந்து தெரிகிறது.

"அமெரியின் பிரசங்கம் எனக்கு மிகவும் மனச் சோர்வை அளிக்கிறது. அவரது பேச்சில் காரிய புத்தியுள்ள ஒரு யோச னையும் இல்லை; பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கு மிடையே ஒத்

துழைப்பு ஏற்பட வழியொன்றும் அவர் சொல்ல வில்லை'' எனக் கூறினர். இந்தியர்கள் கூடுமான வரையில் இவர் கூறுவதே தங்களது தீர்ப்பு என அங்கீகரிக்கத் தயாராயிருப்பார்கள்.

''பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குப் பிரித்தாளும் அரசாங்கம்'' எனப் பொருள் கூறலாம். பிரித்தாளும் தந்திரத்தை வைத்துக் கொண்டே பிரிட்டன் இந்தியாவை வெகு காலம் ஆண்டு வருகிறது. அரசாங்கத்தின் வேலை ஹிந்து முஸ்லிம்களைக் கலகம் செய்யும்படி தூண்டி விடுவதே! அவ்விதம் செய்தால்தான் பிரிட்டிஷ் அரசாங்கம் நீடித்திருக்கும் என்பது பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளின் நினைவு. முஸ்லிம்களை தம் கைக்குள் போட்டுக் கொள்வதே தங்களுடைய நோக்கமென்று சில இடங்களில் அவர்களே காட்டியிருக்கிறார்கள். முஸ்லிம் லீகே இந்தியாவின் சில கோடி முஸ்லிம்களுக்குப் பிரதிநிதியென்று அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். முஸ்லிம் லீகைத் திருப்தி செய்யவும் அரசாங்கம் பல விதத்திலும் பாடுபட்டு வருகிறது. இதனால்தான் சாப்ரு மகா நாட்டின் கோரிக்கையை ஜனப் ஜின்னா நிராகரித்த உடனே, ஸ்ரீ அமெரியும் நிராகரித்து விட்டார். இவ்வளவு காலமாக தாசானு தாசர்களாயிருந்த சாப்ரு கோஷ்டியாரின் தீர்மானத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் நிராகரித்தது ஓர் ஆச்சர்யமே! அவ் வரசாங்கத்திற்கு சாப்ருவின் உதவி பெரிதா? அல்லது ஜின்னாவின் உதவி பெரிதா? சாப்ரு கட்சி போன்ற சிறிய கட்சி பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு என்ன பெரிய காரியத்தைச் சாதித்து விடப் போகிறது? ஒன்றுமில்லை. ''அண்ணா சாப்ருவே உம்முடைய அபிப்ராயம் அவ்வளவு போற்றத்தக்கதல்ல; அதற்காக என் மேல் கோபிக்க வேண்டாம். உம் கட்சியைப் பெரிதாக்கும், பின்பு உம்மிடமே இந்திய அரசாங்கத்தை விட்டு விடுகிறோம்'' என்று அமெரி நயமாகப் பேசி சாப்ருவின் முகத்தில் கரியைப் பூசிவிட்டார்! சாப்ருவின் கட்சி பெரிதாக வேண்டுமாம்! அது எக்காலத்தில் நடக்கக்கூடிய காரியம்! அது எவ்விதம் நடப்பது வாஸ்தவமோ, அவ்விதம் தான் இந்தியாவுக்கு ஜனநாயக அரசாட்சி கொடுப்பது வாஸ்தவம் என்று அமெரியின் கூற்றில் மறைந்து கிடக்கிறது.

தற்சமயம் பிரிட்டனின் மனப்பான்மையைப் பின் வருமாறு ஊகிக்கலாம். (1) பிரிட்டன் தன் அதிகாரத்தை விட்டு விடத் தயாராயில்லை. (2) முஸ்லிம் லீகை எதிரியாக ஏற்றுக் கொள்ளவும் தயாராயில்லை (3) பிற்காலத்தில் லீகை எதிர்க்க வேண்டிய அவசியம் ஏற்படுமாயின் அதற்கும் இடம் வைத்துக் கொள்ள பாகிஸ்தான் கொள்கையை ஏற்றுக் கொள்ளாமலிருக்கிறது. (4) பிற்காலத்திலும் எவ்வித சிரமமுமின்றி ஆட்சி நடத்த காங்கிரஸ், லீக், லிபரல்முதலிய கட்சிகளைக் குத்திவிட்டு வேடிக்கை பார்ப்பது.

இந்தியாவில் கவர்னர்களின் அரசாட்சியை இன்னும் ஒரு வருஷம், கண்ணியமான ஸ்ரீ அமெரி நீடித்திருக்கிறார். பேசுகையில் ஸ்ரீ அமெரி, "காங்கிரஸ் ஆட்சி நின்றதனால் இந்தியர்கள் எவ்வித மனக் கிலேசமும் அடையவில்லை" எனப் பகிரங்கமாக ஓர் புளுகை அள்ளி வீசியெறிந்தார். சில வருஷங்களுக்கு முன்பு 'இந்தியாவில் ஒரு நாயும் குறைக்க வில்லை; நமது ஒட்டகைக் கூட்டம் எவ்வித தங்கு தடங்கலின்றி யாத்திரை செய்து வருகிறது' என்று ஹோர் கூறியது இன்னும் இந்தியர்களின் மனதிலிருந்து அழியவில்லை. இவ்வித கேவலமான எண்ணத்தைத் தான் பிரிட்டிஷ் ராஜதந்திரிகளின் மனதில் கொண்டிருக்கிறார்கள். இதே ரகத்தில் தான் இந்தியாவைப் பற்றி மானக் கேடான பிரசாரத்தை பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் செய்து வருகின்றனர். இப்பிரசாரத்தைத் தற்கால உலகம் ஏற்றுக் கொள்ளுமா? ஒருக்காலும் ஏற்றுக் கொள்ளாது.

சாப்ருவினுடைய கோரிக்கையை நிராகரிப்பதற்கு, இந்தியர்களிடமுள்ள அவநம்பிக்கை தான் காரணம். இந்தியர்களிடம் பிரிட்டனுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டதன் காரண மென்ன? வேறொன்று மில்லை. ஏகாதிபத்தியப் பேராசை தான் காரணம். திடீரென்று இந்தியர்களிடம் அரசாட்சியை ஒப்படைத்தால், பிறகு யுத்தத்திற்கு வேண்டிய உதவியை இந்தியா செய்யுமா என்ற சந்தேகந்தான்.

எல்லாக் கட்சியையும்விடக் காங்கிரஸின் மீதுதான் அமெரிக்கு மஹா கோபம். அக்கோபத்தில் பொய்கள் அவர் திருவாயிலிருந்து ஜலப்பிரளயமாக வெளி வருகிறது. "1935ம் வருஷத்து சமஷ்டித் திட்டத்தை நிராகரித்ததற்கு காங்கிரஸ்காரர் முக்கியமாகக் கருத்தில் கொண்ட காரணம், சமஷ்டி சட்ட சபையில் சிறுபான்மைக் கட்சிகளுக்கு அதிக ஸ்தானங்கள் கொடுக்கப் பட்டதே" என்று ஸ்ரீ அமெரி கூறுகிறார்.

"சிறுபான்மைப் பகுதிகளுக்குக் கிடைத்த அனுகூலங்களைப் பறிமுதல் செய்வதே காங்கிரஸின் முக்கிய நோக்கமாகும்" எனக்கூறி முஸ்லிம்களை விஷமஞ் செய்யக்கிளப்புகிறார் ஸ்ரீ அமெரி. அது போதாதென்று முஸ்லிம் அதிகமாயுள்ள மற்ற மாகாணங்களில், முஸ்லிம் லீகர்கள் ஆட்சியை எவ்வளவு அமைதியுடன் நடத்துகிறார்கள் எனவும் பெருமை, யடித்துக் கொள்கிறார்! இப்பெருமை யடித்துக்கொள்பவருக்கு டாக்காவில் நடக்கும் கோரக் கலகம் காதில் விழுந்திருக்குமா வென்பது சந்தேகமாக யிருக்கிறது. அம்மாகாணங்களில் பிரஜைகள் எவ்விதக் குறையுமின்றி ஆநந்தமாகக் காலட்சேபம் செய்கிறார்களாம்! இவ்வித ஜோடனையுடன் புளுகுபவரை என்ன வென்று கூறுவது. அதே ஹோதாவில் பேசும் பொழுது, பாகிஸ்தான் கொள்கை நியாயமான காரணங்களினால் கிளம்பியதாகவும் கூறுகிறார். இந்த தோரணையில் பேசுகிறவர்

"லீகையும் காங்கிரஸையும் சமரசமாகச் சேர்த்து வைக்க முயற்சிக்க வேண்டும்" என்று சாப்ரு கோஷ்டியாருக்குக் கூறினல், அது பைத்தியக்காரன் பிதற்றலா அல்லது சுயபுத்தியுள்ளவன் கூறும் கூற்ரு என்பது சந்தேகமாக இருக்கிறது.

முடிவாக இந்தியாவும் பிரிட்டனும் ஏதாவதொரு ஒப்பந்தத்திற்கு வர வேண்டுமானல், முதன் முதலில் தற்பொழுதிருக்கும் இந்தியா மந்திரி ஸ்ரீ அமெரி தன் ஸ்தானத்தைக் காலி செய்துவிட்டு, இந்தியாவுக்கு அனுகூலமாக இருக்கும் ஒருவரை அந்த ஸதானத்தை ஆக்கிரமித்துக் கொள்ள விடவேண்டும். இதை ஸ்ரீ அமெரியே செய்யாவிட்டாலும் அரசாங்கம் செய்ய முயற்சி செய்ய வேண்டும்; இரண்டும் நடக்காவிட்டால் இவ்விரு நாடுகளுக்கும் நடுவில் எவ்வித சிநேக பாவமும் ஏற்பட இடமில்லை.

கடைசியாக வந்த செய்தி மிகவும் பயங்கரமாக இருக்கிறது. கிரீஸும் ஜெர்மனிக்குத் தாழ்ந்து விட்டது. இந் நெருக்கடியான காலத்தில்கூட பிரிட்டன் பொறுப்பற்றமுறையில், 'பழைய குருடி கதவைத் திறடி' என்றபடியே நடந்து வந்தால் அந்தக் குருடிகளுக்கு ஏற்பட்ட நிலை பிரிட்டனுக்கும் வராதென்று, யார் சொல்ல முடியும்?

திருத்தம்

ஜெர்மன்—இத்தாலியக் கைதிகளுக்கு, இந்தியா கவர்ன்மெண்ட், தண்டச் செலவு செய்கிறதென்றும், ஆனல் இந்தியப் பணத்தை நம் நாட்டு ராஜீயக் கைதிகளுக்கு செலவழிக்க அதற்கு மனம் வருவதில்லை யென்றும் சென்ற இதழில் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தோம்.

அந்தச் செய்தி 'தவறு' என்றும், இந்தியா கவர்ன்மெண்ட் ஜெர்மன்—இத்தாலியக் கைதிகளுக்கு செலவு செய்வதில்லை யென்றும், அச்செலவை மன்னர் சர்க்கார் தான் ஏற்றுக் கொண்டுள்ளார்களென்றும், இப்பொழுது சென்னை அரசாங்கத்திடமிருந்து நமக்கு ஒரு அறிக்கை வந்திருக்கிறது.

எனவே தவறுதலாய்ப் பிரசுரமான அச் செய்தியைத் திருத்தி வாசித்துக் கொள்ள வேண்டுமாய் நேயர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

—ஆசிரியர்.

ரூ. 10,000 இனாம்!

ஜலந்தர் ஸிடியில்
தங்கம் தோலா
1-க்கு ரூ. 2-8-0

யாராவது மேற் குறிப்பிட்ட
தங்கத்தை பொய் என்று
நிரூபித்தால் அவர்களுக்கு
ரூ. **10,000** இனாமாக
அளிக்கப்படும்.

இந்தத் தங்கத்தை வரவழைத்துக் கொண்டவர்கள்
மேன்மேலும் ஆர்டர் கொடுக்கிறார்கள்.

ஸ்ரீ ஹஸாரி லால் சௌலா அவர்கள் பத்தான்கோட்டியிலிருந்து எழுதியதை சற்று கவனித்துப் பாருங்கள் :

நீங்கள் அனுப்பிய அமெரிக்கன் புதிய தங்கம் பார்சல் கிடைத்தது. வந்தனம். இது அசல் தங்கம் மாதிரியாகவே இருக்கிறது. இதற்கும் அசல் தங்கத்திற்கும் யாதொரு வித்தியாசமும் காணப்படவில்லை. மறு தபாலில் இன்னும் 6 தோலா அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். மேன்மேலும் ஆர்டர்கள் அனுப்புகிறேன்.

இந்தத் தங்கம் மாற்றுக் கல்லில் உறைத்தால் அசல் தங்கம் மாதிரியே காட்டுகிறது. இதை கம்பியாகவும் நீட்டலாம். தட்டாகவும் அடிக்கலாம். சகல ஆபரணங்களும் இதனால் செய்யலாம்.

1 தோலா ரூ. 2—8—0-க்கு கொடுத்து வருகிறோம்.
3-தோலா ரூ. 7. 6-தோலா ரூ. 13. 10-தோலா ரூ. 20

உங்களுக்கு திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்.
இன்றே ஆர்டர் கொடுங்கள்.

முக்கிய கவனிப்பு:—3 தோலாக்களாவது 6 தோலாக்களாவது வரவழைத்துக் கொள்பவருக்கு தபால் சார்ஜ் இனாம். 3 தோலா, 6 தோலாக்களுக்கு மேல் ஆர்டர் கொடுத்தால் பாரிஸ் கோல்டை கொண்டு தயாரித்த ஒரு ஜதை வளையலும், ஒரு ஜதை காது வளையமும் இனாம்.

Sole Agents : **AMERICAN TRADING Co., (C.T.M.)**
JULLUNDUR CITY.

ரஷ்ய—ஜப்பான் ஒப்பந்தம்.

நேற்றுவரையிலும் ஜன்ம வைரியாக இருந்த ரஷ்யாவும் ஜப்பானும் இன்று சிநேகபாவத்துடன் கைகுலுக்கினுர்கள்! இவ்வொப்பந்தம் வெகுநாட்களாக எதிர் பார்த்ததுதான். இதனும் அச்சுநாடுகள் அதிக பலனை அடையக் கூடும். இவ் வொப்பந்தத்திற்காக அச்சு நாடுகள் வெகு காலமாக வேலை செய்து வருகிறது. இனிமேல் ரஷ்யா எவ்வித பயமுமின்றி நடு நிலைமையை வகித்துக் கொண்டிருக்கலாம். அதுவுந் தவிர அந்நாடு, நேச நாடுகளையும், அமெரிக்காவையும் எதிர்க்கும் அச்சு நாடுகளுக்கு ஜப்பானுடன் சேர்ந்து உதவி செய்தாலும் செய்யலாம். மற்றும் இவ்வொப்பந்தம் சைனுவுக்கு மிகக் கெடுதலை விளைவிக்கிறது. இனிமேல் ஜப்பான் எவ்வித பயமுமின்றி சைனுவைத் தாக்கலாம். அதுவுந் தவிர கீழ்க் கோடியில் ஜப்பான், அமெரிக்கா பிரிட்டனுக்கு உதவி செய்வதைத் தடுக்கலாம். இதனல் பிரிட்டன் அதிக சங்கடத்திற்குள்ளாகலாம்.

மஹாராஜா ராமவர்மா

கொச்சி சமஸ்தானத்தை வெகு வருஷங்கள் ஆண்டு சில நாட்களுக்கு முன்பாக உயிர் நீத்த மஹாராஜா ஸ்ரீ ராமவர்மா போற்றத்தக்க குணதிசயங்களைப் பெற்றவர். வாழ்க்கையின் அந்திய காலத்தில் அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக் கொண்டாலும், மனுநீதி முறை வழுவாமல் பிரஜைகளைக் குற்றங்குறையின்றி ஆண்டு வந்தார். அவரது ஆட்சியில் சமஸ்தானம் பலவிதத்திலும் முன்னேற்றமடைந்தது. கொச்சியில் துறைமுகத்தை ஸ்தாபித்த பெருமை அவரைச் சேர்ந்தது. திருவாங்கூருடன் ஆல்வாய் ஜலத்தை போக்குவரவு சாதனத்துக்கு உபயோகப் படுத்தவும், பள்ளிவாசல் மின்சாரத்தை உபயோகப் படுத்திக் கொள்ளவும்; ஒப்பந்தம் செய்து கொண்டார். இது தவிர ராஜரீக முறையிலும் சீர்திருத்தம் கொண்டுவந்தார். சமஸ்தானத்தின் பெரிய நியாய ஸ்தலத்தை ஹைகோர்ட்டுக்குச் சமமாகவும், ராஜ சபையில் பல சீர்திருத்தங்களையும் நுழைத்து பிரஜைகளுக்கு மதிப்புக் கொடுத்தார். மஹாராஜா எல்லோராலும் விரும்பப்படும் சாதாரண வாழ்க்கையை நடத்தி, எல்லோராலும் போற்றப்பட்டு வந்தார். அவரைக் கொச்சிமட்டும் இழக்கவில்லை; இந்தியாவே இழந்ததெனக் கூறவேண்டும்.

பர்மாவும் சினிமாவும்

புதிய வியாபார ஒப்பந்தப் பிரகாரம் பர்மாவில் இறக்குமதியாகும் இங்கிலீஷ் படங்கள் $37\frac{1}{2}$ சதவிகிதம் வரிகட்டவேண்டும். இதனல்ஒவ்வொரு தியேட்டரும் வாரா வாரம் 1,600

ரூபாய் நஷ்ட மடைகிறதென்று தெரிகிறது. இங்கிலீஷ் படம் மட்டுமின்றி இந்தியப் படமும் அதே கதியைத்தான் அடைகிறது. இந்தியப் படத்திற்கு 15 சத விகிதமே யிருந்தாலும், அதே பெருத்த நஷ்டத்தை உண்டுபண்ணுகிறது என்று பயந்து, கொட்டகைக்காரர்கள் கொட்டகையை மூடப் போவதாகத் தெரிகிறது. சில படங்களை கொட்டகைக்காரர்கள் துறைமுகத்தி லிருந்தும் எடுக்கவில்லையெனச் செய்தி கிடைத்திருக்கிறது. பர்மா செய்து கொண்ட ஒப்பந்தத்தினால் அந்நாட்டிற்கும் இந்தியாவுக்கும் எவ்வித உபயோகமும் இல்லாமல் போய்விடுகிறது. இந்திய முதலாளிகள் பர்மாவின் வசூலை இழந்துவிடுகிறார்கள். ஆனால் பர்மாவோ, இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் போதாதென்று அதிகப்படியான திண்டாட்டத்தைச் சிருஷ்டிசெய்து கொள்கிறது. அதுவுமன்றி சினிமாக் கலைக்கும் ஓர் சாவுமணி அடிக்கிறது. பல கொட்டகை முதலாளிகள் மந்திரியைப் பேட்டிகாணச் சென்றிருக்கிறார்கள். அரசாங்கத்தார் தேசத்திற்கு சாதகமாக ஓர் முடிவுக்கு வந்தால் அது எல்லோருக்கும் நன்மை பயக்கும்.

மறுபடியும் எப். இ. ஜேம்ஸ்

இந்த ஆசாமியை எல்லோரும் அறிந்திருப்பார்கள். சமயமும் இடமும் வாய்த்தபோதெல்லாம் இவர் ஏதாவது தத்துப்பித்தென்று உளறிக் கொட்டுவார். இப்பொழுது அவருக்குக் கூனூர் போன்ற குளிர்ந்த இடம் அகப்பட்டிருக்கிறது உளறிக் கொட்டுவதற்கு. ஐரோப்பியர்கள் மத்தியில்

அனுபவ ஜோதிஷர்

திறமைக்குப் பல தங்க மெடல்களும் நற்சாட்சிகளும் பெற்றவர். எதிர் காலத்தைப் பற்றி 3 கேள்விகளுக்குப் பதில்கூற ரூ. 1/- மேற்கொண்டு கேள்விகளுக்கு அணா. 8 மாதவாரியாக ஒரு வருஷத்திற்கு எதிர்கால பலன் கூற ரூ. 5/- ஒரு ஜாதகம் கணிப்பதற்கு ரூ. 2/- மிகவும் விவரமாக முழு வாழ்க்கைக்குப் பலன் கூற ரூ. 25/- ஜனனவிவரம் அல்லது எழுதும்நேரத்தைக் குறிப்பிடுங்கள்.

"டபிள்யு பிளான்", "சாபு" முதலிய புத்தகங்களின் ஆசிரியரான லெப்டினன்ட் கர்னல் கிரஹாம ஸெடன் ஹச்சிசன், டி. எஸ். ஓ., எம். வி., லண்டனிலிருந்து கூறுகிறார்:—"இவரது ஆருடங்களின் நேர்மை ஆச்சரியகரமாய் இருக்கிறது." புரொபசர்

காழியூர் கோவிந்தாச்சாரி,
3/2, பிராடீஸ் ரோட்,
மைலாப்பூர், மதராஸ்.

டோங்ரேயின்
பாலாம்ருதம்
குழந்தைகளுக்கு பிரசித்தி பெற்ற டானிக்

பேசும் பொழுது இவர் "இந்தியாவில் ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை ஏற்படாத வரையில் சுயராஜ்யம் கொடுப்பது முடியாத காரியம்" என்ருர். நல்ல வாக்குத்தான். இவர் பேசுகிற ரீதியைப்பார்ப்போமானல், ஒரு சமயம் பிரிட்டன் இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுப்பதாகவும் தீர்மானித்தார்களென்று தெரிகிறதல்லவா. ஆனல் ஒனறே ஒன்று ஜேம்ஸ் பெரியாருக்குக் கூற விரும்புகிறேம்; பிரிட்டிஷ் ஆட்சிதான் இந்தியாவின் வகுப்புக் கலகங்களுக்குக் காரணம். பிரிட்டன் வாக்குறுதி கொடுக்கிறதேயொழிய அதை நிறைவேற்ற அதற்கு விருப்பமில்லை.

கலகம் பரவுகிறது

டாக்காவில்தான் வகுப்புக் கலகமென்றால் அது காட்டுத்தீயென அகமதாபாத்திலும் பரவியிருக்கிறது. சில நாட்களுக்கு முன்பாக கலகம் குடியாத்தத்திலும் தலைகாட்டியது. அதை உடனே தலைகாட்டா வண்ணம் அடித்தாய் விட்டது. அகமதாபாத்தில் கலகத்தினல் 55 பேர்கள் இறந்தனர். 300 பேர்களுக்குமேல் காயமடைந்தனர். ஆனல் கலகம் நீடிக்காதிருக்க அதிகாரிகள் பார்த்துக் கொண்டு வருகின்றனர். டாக்காவில் அப்படியல்ல. பாகிஸ்தானை இந்தியாவில் நுழைத்தால் எவ்விதமிருக்கும் என்பதை டாக்கா நிரூபித்துக் கொண்டு வருகிறது. டாக்காவுக் கருகிலுள்ள கிராமங்களில் கலகக்காரர்கள் ஹிந்துக்கள் வீட்டைக் கொள்ளை யடிப்பதும். கடைகளைக் கொளுத்துவதும் இன்னும் குறைந்தபாடில்லை. அரசாங்கம் முதலிலேயே நல்ல எண்ணத்துடன் முயற்சித் திருப்பார்களாயின் இன்று கலகம் இருந்த இடம் தெரியாமல் போயிருக்கும். ஆனல் அந்த முடிவுக்கு அரசாங்கம் ஆசைப்படவில்லையெனத் தெரிகிறது! ஆனல் ஒன்று. வங்காளத்தில் ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை நிலைத்து நிற்க வேண்டுமானல் உடனே தற்சமயம் இருக்கும் மந்திரிசபை இடத்தைக் காலிசெய்து கொண்டு போகவேண்டும்.

இனம்! வருடப் பலன் இனம்!!
எதிர்கால கேள்வி 5-க்கு ரூ. 1-8-0. விடையுடன்

1941ஹு தாங்கள் நினைக்கும் ஒவ்வொரு காரியமும் சித்தி பெறும் சந்திரனின் நாட்களும் மணிக்கு மணி பலாபலன் அட்டவணையுடன் ஆரோக்கியம், குடும்பம், தொழில், ஆதாயம், விரயம், காதல், கடன், அதிருஷ்டம், மாதம், நாள், நேரம், நெம்பர், திக்கு, புஷ்பம், லாட்டரி, ரேஸ் இன்னும் பலாபலன் தாங்கள் எழுதிய மாதம் முதல் ஓர் வருடத்திற்கு இனமாக எழுதி அனுப்பப்படும். ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஸ்ரீ ஷண்முகக் கடவுள் அருளால் எழுதும் உண்மைப் பலனல் பல கலக்கத்தில் தியங்காது மீட்கப்பட்டவராவீர் உண்மை. ஜாதகம் கணிக்க ரூ. 2. வி. பி. வேறு.

புரபஸர்
N.V. சுப்பிரமணியம், J.M.& J.A.
நெ. 7, ஜோதிஷ ஆசிரமம்,
வாலாஜாபாத் P. O., S. I. Ry.
(சென்னை.)

பிரசாரம்

ஆ. வே. ஜெயராமன்

தற்கால உலகில் பிரசாரந்தான் எதற்கும் முக்கியமாக விளங்குகிறது. பழங்காலத்திலிருந்து இப்பிரசாரக் கொள்கையை மதஸ்தாபனர்களும், ராஜீய வாதிகளும் கையாண்டு வந்திருக்கின்றனர். அசோகர் புத்தமதத்தைப் பரவச் செய்தது பிரசாரத்தினால்தான். கிறிஸ்து மதம் உலகில் மூலை முடுக்குகளில் பரவியதன் காரணம் முக்காலே மூன்று வீசம் பிரசாரத்தினால் தான். தற்சமயம் பெரிய ராஜ்யம் சிறிய ராஜ்யத்தை விழுங்கி ஏப்ப மிடுவதும் பிரசாரத்தினால்தான். தேசத்தில் தேசீயத்தை ஓர் காரணமாகக் கொண்டு தேசபக்தியை ஆழமாகவும், உறமாகவும் குடிகளின் மனதில் பதியும் படியாயும் செய்வது பிரசாரந்தான். யுத்தத்தில் எதிரிகளின் கோரச் செயல்களையும், தங்களுடைய அஞ்சா நெஞ்சம் படைத்த வீரர்களின் தீரச் செயல்களையும் வானமளாவப்புகழ்ந்து கொண்டாடியும், எதிரியின் கப்பல்கள் அங்கு நான்கு மூழ்கின, இங்கு எட்டு தீப்பற்றி எறிந்து போயின வென்ற உண்மைக் கலப்பில்லாத செய்தியும்; எதிரிகளுக்கு இனிமேல் துரும்பெடுக்கக் கூடச் சக்தியில்லை யென்றும், நாங்கள் இன்னும் ஆயிரம் வருஷங்கள் சண்டை செய்ய வேண்டுமானாலும் சண்டை செய்வோம் என்றும்; எதிரிகளின் சிறிய தோல்வியைப் பெரிதாக்கவும், தங்களுடைய பெரிய தோல்வியைச் சிறிதாக்கவும் இப்பிரசார மென்னும் ஆயுதம் பயன் படுகிறது. இப்பிரசாரம் தங்கு தடங்கலின்றி நடத்தி முடிக்கப் பத்திரிகையும், ஹாஸ்யச் சித்திரங்களும், சினிமாவும், மேடைகளும், ரேடியோவும் பக்க பலங்களாக இருக்கின்றன.

ஜனங்களுக்கு அறிவைக் கொடுக்கும் பிரசாரம் அவர்களை அஞ்ஞானத்தில் அமிழ்த்தி விட உபயோகப் படுகிறது. ஜனங்கள் ஆய்ந்தோய்ந்து பார்த்து ஒரு முடிவுக்கு வர இது இடங்கொடுப்பதில்லை. பிரசாரகர்கள் தங்கள் பிரசாரத்தினால், தாங்கள் கூறுவதே தேவவாக்கு என எடுத்துக் கொள்ளுமாறு ஜனங்களை வற்புறுத்தும் நிலைவரையிலும் வந்து விட்டது. பிரசாரமென்னும் பேய் மற்ற அபிப்ராயங்களைத் தள்ளி விட்டு, ஒருவனை அது கொண்ட அபிப்ராயத்தையே கேட்கச் செய்கிறது. அவனும் அவ்வபிப்ராயத்தைத் தானே நிர்ணயித்தோம், தன்னுடைய மூளை வேலையினால் கிடைத்த சரக்கு என எண்ணி மெய்குளிர்ந்து சந்தோஷப் படுகிறான்.

பிரசாரமென்பது ஓர் பெரிய சாஸ்திரம். அதைக் கையாள்வது கடினமான காரியம். கையாள்பவன் மானிடக் கூட்டத்தின் போக்கையும், நிலையையும் அறிந்திருக்கவேண்டும்.

தற்சமயம் நவ நாகரிகம் கோர நர்த்தனஞ் செய்யும் மேல் நாட்டில் நடக்கும் யுத்தம் ஆயுத பலத்தினாலும் பிரசார பலத்தினாலும் நடந்து வருகிறது. விசையைக் கடுகளவு திருப்பினால் ஹிட்லர் கோஷ்டியார் தொண்டையைக் கிழித்துக் கொண்டு கத்துகிறார்கள். மறுபடியும் ஒரு தினையளவு திருப்பினால் போதும் பக்க வாத்தியத்துடன் சர்ச்சில் கோஷ்டியார் ரேடியே

இயந்திரத்தைத் தாக்க ஆரம்பித்து விடுகின்றனர். இது வரையிலும் ஹிட்லர் நாட்டைப் பிடித்திருப்பது பிரசார பலத்தினாலன்றி ஆயுத பலத்தினாலன்று. வாய்த் தம்பட்டம் கோயபல்ஸ் இருக்கும் வரையிலும் நாஜிப் பிரசாரத்திற்கு அழிவே கிடையாது என்பது உலகம் அறிந்த விஷயம்.

பிரசாரம் செய்வதற்கும் அது தங்கு தடங்கலின்றி நிறைவேறுவதற்கும் சில ரகசிய விதிகளை ஏ.கே.மெக்கன்ஸி என்ற மேல் நாட்டு அறிஞரொருவர் கூறியிருக்கிறார். அவைகள் பின்வருமாறு.

1. பிரசாரத்திற்கு அழகு சொன்னதையே சொல்லுதலாகும். ஜனங்கள் ஒருதரம், இரண்டுதரம் அல்லது மூன்றுதரம் கூறினால் கூடச் சொல்லியதை மறந்து விடும் சுபாவ முள்ளவர்கள். பிரசாரகர்கள் அவர்கள் கண் போல வைத்திருக்கும் சில முக்கிய விஷயங்களைப் பலதரம் பாடம் படித்து, கேட்பவர்கள் மனதில் பசுமரத்தாணி போலப் பதிய வைத்து விடுவார்கள். "எறும்பூரக்கல்லுந்தேயும்" என்னும் பழமொழியின் உள்ளர்த்தத்தை நன்றாக அறிந்தவர்கள் தான் பிரசாரகர்கள். இதனால் கேட்பவர்களின் மனம் பலம் குன்றி எதற்கும் இடங்கொடுக்கக் காத்திருக்கும்.

2. பிரசாரகர்கள் உலகம் போற்றும் ஓர் மனிதனைத் தலைவனாக ஏற்றுக் கொள்ள வேண்டும். மானிடர்கள் துதி செய்யவும் கொண்டாடவும் ஓர் உயர்ந்த மனிதனை இலக்ஷியமாக வைத்துக் கொள்ள வேண்டும். வைகுந்தத்திலிருக்கும் விஷ்ணுவையும் கைலாயத்திலிருக்கும் சிவனையும் கூப்பிட்டுக் கொண்டிருந்தால் காரியம் நடக்காது. "காந்தி ஓர் அவதார புருஷன்" "ஹிட்லர் தேவனால் அனுப்பப்பட்ட ஓர் தீர்க்கதரிசி" எனச் சொல்லிக் கொண்டு திரிந்தால் தான் வலையில் மனிதர்கள் வந்து விழுவார்கள். ஊரார் தெரியாத பேர்வழியாக இருந்தாலும் அவர்களை அம்பலத்தில் இழுத்து விட்டுக் காரியத்தைச் சாதித்துக் கொள்ள வேண்டும். வேண்டுமானால் அப்பெரியாரைப்பற்றிய நடக்காத அற்புதங்களைச் சிருஷ்டி செய்து கொள்ளலாம்.

3. பிரசாரம் செய்யப் படும் விஷயத்தில் ஒரு கடுகளவாவது உண்மை இருக்க வேண்டும். "புளுகன் சொல் விடிஞ்சால் தெரியும்" என்னும் பழமொழிக் கேற்றவாறு முழுவதும் பொய்யும் புளுகுமாக இருந்தால் சீக்கிரம் குட்டு வெளிப்பட்டு விடும். ஆதலால் சிறிதளவு நிஜக்கலப் புடன் பேச வேண்டும். அவ்வித மிருந்தால் தான் பொது ஜனங்கள் இக் கடுகளவு உண்மையைக் கொண்டு எல்லாவற்றையும் உண்மையென்று சீக்கிரம் நம்பி விடுவார்கள்.

ஹிந்து சமுகத்தில் ஹரிஜனங்கள் எவ்வித சலுகையுமின்றி ஒதுக்கப் பட்டிருக்கிறார்களென்பது உண்மை. இதையே பெரிதென மதித்து, உலக மக்களை உத்தாரணம் செய்யவரும் பாதிரி மார்கள், "அஞ்ஞானத்தில் உழன்று திரியும் அஞ்ஞானியே, தேவன் உங்களுக்காக இறந்தான். ஆதலால் ஞானஸ்நானம் செய்து கொண்டு புண்ணியத்தை மூட்டை கட்டிக் கொள்ளுங்கள்," என்று கூறுகிறார்கள். 'ஞானமற்றவனே' எனக் கூறினால் சண்டைக்கு வந்து விடுவார்கள் எனப் பயந்து 'அஞ்ஞானியே' என்று கூப்பிடுவது பாதிரிமார்களின் சொல் நயம்.

4. பிரசாரகர்கள் பொது ஜனங்களை வசீகரிக்கக் கூடிய பாக்களையாவது வாழ்த்துக்களையாவது மனப் பாடஞ் செய்து உபயோகிக்க வேண்டும், "சகோதரத்துவம், சமத்துவம், சுதந்திரம்," "தேசமக்களே ஒன்று கூடுங்கள்" என்ற தொடர்கள் கேட்பவர்களின் மனதில் ஊன்றி ஊடுருவிப் பாயுமென்பதில் சந்தேகமில்லை. "ஒருவனுக்கு உணவில்லையெனில் இச்சகத்தினை அழித்திடுவோம்" என்னும் பாட்டு இம்மானிடக் கும்பலை மின்சாரம் போல் இழுக்காமல் இருக்குமா?

5. பிரசாரகர்கள் அவர்களுடைய நோக்கத்தைப் பிறர் அறியாமல் வைத்துக் கொள்ளவேண்டும். பிரசாரத்தின் முக்கிய நோக்கத்தைச் சீக்கிரம் வெளியிடுவது முட்டாள்தனம். தாண்டவராய பிள்ளை முனிசிபல் தேர்தலுக்கு நிற்கிறாரென்றால், அவரைத் தாங்கி நிற்கும் 'வாரைகள்' பிள்ளை முனிசிபல் மெம்பராக ஆசைப் படுகிறார் என்று சொன்னால் காரியம் கெட்டு விடும். அதனால் இந்த டிவிஷனுக்கு தாண்டவராயபிள்ளை தான் ஏற்றவரென்றும், அவர் தான் பொது நலங்களைச் சிரத்தையுடன் செய்வாரென்றும், ஜனங்களுக்கு நன்மை செய்வதே அவர் நோக்க மென்றும் பறை சாற்ற வேண்டும்.

6. காலத்தை முக்கியமாக எடுத்துக் கொள்ள வேண்டும். எதையும் அதனதன் காலத்தில் செய்தால் தான் கனிவடையும். தேர்தல் ரொம்ப நெருக்கடியாக இருக்கும் சமயத்தில் செய்யும் பிரசாரம் பெரிய மாறுதலை உண்டு பண்ணும். எந்த சமயத்தில் வெடிகுண்டை வீசலாமென்பதுதான் முக்கியமாகத் தெரிந்திருக்கவேண்டும்.

3 கடியாரங்களும், 1002 அழகிய சாமான்களும்



விலை ரூ. 1-4-0 தான்

நாங்கள் தயாரித்துள்ள ஆட்டோ ரோஸ் பாட்டில்களில் 4-வது அல்லது 4 பாட்டில்கள் படை மருந்தாவது ஒரே தரம் ரூ. 1—4—0க்கு வாங்குபவர்களுக்கு ஒரு ரயில்வே டைம் டம்மி பாக்கட் வாட்சும், ஒரு தங்க கில்ட்டுடைய டம்மி ரிஸ்ட் வாட்சும், 1 சேப்டி ரேசர், 1 பிரஷ், 1 சீப்பு, 1 கண்ணாடி, 1 பவுடர் பாக்கட், 1 செட் ரோல்டு கோல்டு பொத்தான், 1 கைகுட்டை, 1 பவுண்டன் பேனா நிப்புடனும், 1 ரோல்டு கோல்டு மோதிரம், 1 டார்ச் லைட் அல்லது 1 பி. டைம்பீஸ் உறுதியான சாமான்களுடனும் 5 வருஷம் உத்திரவாதம் உள்ள முதலியன அனுப்பப்படும். தபால் சிலவு அணா 12 தனி.

THE NATIONAL WATCH Coy., (C.A.) Post Box No, 12210, Calcutta.

நிகரற்ற தேகவலிமை, புதிய ரத்த ஓட்டம், அபாரமான ஜீவசக்தி, ஆனந்தமயமான இன்பம்,

இவைகளையடைய

ஜீவானந்த ரஸாயனம்

மிகவும் கீர்த்திப் பெற்றது.

இந்த ரஸாயனத்தில் முத்து, பவழம், அயத்தங்சம் முதலிய விலை கொண்ட பஸ்ப செந்தூரங்களும், மலையாள வனமூலிகைகளும் முறைப்படி சேர்த்து, நீண்ட அனுபவத்தின் பேரில் முடித்தது, சாப்பிட மிக்க ருசிகரமானது, பத்தியமில்லாதது. இதனுல் தீரும் வியாதிகள் :—தளர்ந்த நரம்புகளை பலப் படுத்தி, நரம்புகளில் பற்றியிருக்கின்ற மேக விஷ துர்நீர்களைப் போக்கி, ஆண்மைக் குறைவு, நபும்ஸகம், வெள்ளை, நீர் எரிச்சல், அதி மூத்திரம், மது மூத்திரம், இரத்தக் கொதிப்பு, மூலச்சூடு, வரட்சி இருமல், சுக்ல நஷ்டம், சொர்ப்பனஸ்கலிதம், இரத்த மின்றி, மெலிந்து பலஹீனமடைதல், ஞாபகமறதி, நீடித்த மல பந்தம், தூக்கமின் மை வாய்ப்புண், ஸ்திரீகளுக்கு ருதுக சமயத்தில் பெரும்பாடு, மர்ம ஸ்தானத்தில் எரிச்சல், வெள்ளை விழுதல் முதலிய ஸ்திரீ புருஷர்களுக்கேற்படும் நானாவிதமான ரோகங்களையும் நிச்சயமாய் போக்கும். தாதுவிருத்தியையும் சத்புத்திர சந்தான செல் வத்தையும் அளிப்பதில் இந்த ரஸாயனம் கைவல்யமானது, (முன் பணம் அனுப்பி விடவும்)

2 சேர் டப்பி 1-க்கு 3–8–0 தபால்செலவு 13 அணு } பூரண குணத்திற்கு
1 சேர் டப்பி 1-க்கு 2–0–0 தபால்செலவு 9 அணு } 2சேர்போதுமானது.

கவனிப்பு:—சிலோன், பினங்கு, சிங்கப்பூர், ரங்கூன் முதலிய வெளி நாட்டி னர்கள் முன்பணம் கட்டாயம் அனுப்பவேண்டும். வி. பி. இல்லை.

கடித விலாசம் :— **மலையாள வைத்திய நிலையம்,**
தபால் பெட்டி நெ. 53, மதருஸ்.
Malayala Vaidya Nilayam, P. B. No. 53, Madras. (C)

ஒரே ஒரு மாதம் வரை — ஒரு கடிகாரம் ரூ. 3/12



ா அமைப்பும், அழகான வடிவம் கொண்ட கை கடியாரம் 5 வருடம் உத்திரவாதம் ான காலம் காட்டும். நல்ல குரோமியம் கேஸில் விலை ரூ. 4/8. ரோல்டு ல்டு 10 வருடம் உத்தாவாதம். 4 ஜூவல் கொண்டது ரூ. 6/8. தபால் பாக 10 அணு. 3 கடிகாரம் வாங்கினுல் தபால் சார்ஜ் இனும். 6 கடியாரமாயிருந் ஒரு கை கடியாரம் இனும். வாங்கும் கடியாரத்தின் நம்பரைக் குறித்து எழுத ஒரு வாரத்தில் சம்மதமில்லாவிடில் பணம் வாபஸ். காட்லாக் இனும்.

UTTA CLOCK Co., 15/1, Joymitter St, P. o. Hatkhola, Calcutta. (Sec-153)

ஜூபிடரின் ஜோதி!

முழு ஹாஸ்யத் தமிழ்ப்படம் தயாராகிறது

சன்யாசி

நடிகர்கள் :

P. A. குமார்,
P. G. வெங்கடேசன்
C. S. D. சிங்
K. P. ஜெயராம்
M. V. சாமிநாதன்
ஹாஸ். ஆறுமுகம்
G. N. பூஷணக்குமார்
V. S. ஸ்ரீனிவாஸன்
P. S. ஞானம்
P. R. மங்களம்
T. S. ஜெயா
குமாரி செல்வா
மாஸ்டர் P. P. தங்கவேல்

டைரக்ஷன் :
M. கிருஷ்ணரத்னம்

படப்பிடிப்பு :
S. சுராஸ்

ஒலிப்பதிவு :
M. A. N. அய்யங்கார்

பாட்டு :
T. V. நடராஜ ஆச்சாரி

மியூஸிக் டைரக்ஷன் :
M. S. ஞானமணி

கதை :
K. ஹிரண்ணய்யா

ஸ்டுடியோ :—பாரத் மூவிடோன் & C. T. C.

விவரங்களுக்கு :—

ஜூபிடர் பிலிம்ஸ் (புதுக்கோட்டை)

9, வாசு தெரு, கீழ்ப்பாக்கம், மதராஸ்.

பக்கிரி வளர்த்த பசு

"அமுதன்"

"ஹம்பா, ஹம்பா."

"என்னம்மா? ஏனம்மா கத்தரே?" என்று அன்பு ததும்பக் கூறிக்கொண்டே கையில் சிம்னி விளக்குடன் வந்தான் பக்கிரி.

"உனக்குத் தண்ணி வேணுமா? வைக்கல் வேணுமா? புண்ணாக்கு வேணுமா? என்ன வேணும் சொல்லு" என்று சொல்லிக் கொண்டே லக்ஷ்மியின் முகத்தைத் தடவிக் கொடுத்தான். லக்ஷ்மி நாக்கினால் அவன் கையை நக்கினாள்.

பக்கிரி அதை அவிழ்த்து தொட்டியில் தண்ணீர் காட்டி வைக்கோல் போட்டு "வக்கல் தின்னுட்டு படுத்துண்டு தூங்கு அம்மா" எனக்கூறிவிட்டுக் குடிசையில் நுழைந்தான்.

லக்ஷ்மியின் பாட்டி, கொள்ளுப் பாட்டி எல்லோரும் அக்கொட்டிலிலேயே வளர்ந்தவர்கள். லக்ஷ்மி முறுக்குடன் துள்ளி விளையாடிய காலமுண்டு. காத்தான் காளை அவளைக் கண்டு சொக்கித் திக் பிரமை கொண்ட காலமுமுண்டு. இப்பொழுதோ ஆறு ஈற்று ஈன்ற சிரமத்தில் உடல் தளர்ந்து ஒருவருக்கும் உதவாமல் ஒண்டிக் கிடக்கிறாள். அவளுடைய பெண்ணும் பிள்ளையும், பேத்தியும் பேரனும், கண் காணாத இடத்தில் சிதறிச் சென்று விட்டனர். அதே கொட்டிலில் இருக்கும் எருமைக்கும் இவள் மேல் கொஞ்சம் பொறாமைதான். படிபடியாய்ப் பால் கொடுக்கும் தன்னை விட அக்கிழத்திடம் பக்கிரி அதிக அன்பு காட்டுகிறானே !என்பதுதான் எருமையின் குறை.

லக்ஷ்மியின் அருமை, பக்கிரிக்குத் தெரியுமே யொழிய அந்த எருமைக்கா தெரியும்? அவனுடைய ஒரே குழந்தையை அவள் தானே பால் கொடுத்துக் காப்பாற்றினாள். லக்ஷ்மியில்லாவிட்டால் ராமன் இந்நேரம் மண்ணோடு மண்ணாய்ப் போயிருப்பான் என்று எண்ணும் பொழுதெல்லாம் அவளை பக்கிரி அன்புடன் நோக்குவான்.

கெட்ட காலம் எல்லோருக்கும் வருவது சகஜமல்லவா? பக்கிரிக்கு பணம் தட்டிற்று. அவன் மனைவி காளி, 'லக்ஷ்மியைக் கசாப்புக்கடைக் காரனிடம் விற்றால் இரண்டு மூன்று ரூபாய்க்குக் குறையாமல் வருமெ' ன்று கூறி, அவ்விதம் செய்யும்படி வற்புறுத்தினாள். இக்கடுஞ்சொல் அவன் காதில் நாராசம் ஊற்றினாற் போல இருந்தாலும் என்ன செய்வது? மார்வாடியோ கிட்டி கட்ட ஆரம்பித்து விட்டான். வேறு வழியில்லாமல் லக்ஷ்மியை அன்று சந்தைக்கு அழைத்துச் சென்றான்.

லக்ஷ்மியைப் பார்க்கும் பொழுதெல்லாம் பக்கிரியின் மனம் விம்மும். "லக்ஷ்மி நீ கவடு, மனிதர்களின் மனதை அறியாதவள், அவர்கள் அசுரர்களைக் காட்டிலும் கொடியவர்கள். நீ அவர்களை நம்பிக் கொண்டிருக்கிறாய்," என்று கண்ணீர் ஆறாகப் பெருகத் தழதழத்த குரலில் கூறினான். இவனுடைய கவலை தோய்ந்த முகத்தையே லக்ஷ்மி அண்ணாந்து பார்த்துக் கொண்டு நடந்தாள்.

"என்ன அண்ணே, இந்தக் கிழம் விக்கிறதா என்ன?" எனக் கேட்டுக் கொண்டே வந்தான் கருப்பண்ணன்.

பசு மாடுகளையும் ஆடுகளையும் குறைந்த விலைக்கு வாங்கி, கசாப்புக் கடைக் காரனிடம் விற்று அதிகலாபம் காண்கிறவன் கருப்பண்ணன்.

"விக்கிறத்துக்குத்தான்" என்று கூற ஆரம்பித்தவன் மனதில் என்ன தோன்றியதோ தெரியவில்லை. "வாங்கிக் கிண்டு போறேன்" எனக் கூறிவிட்டு அவனை முறைத்துப் பார்த்தான்.

பொழுது போய்க் கொண்டிருந்தது. நழுவிய தும்பைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். அவன் மனம் பக் பக்கென்று அடித்துக் கொண்டது.

"என்ன படையாச்சி அண்ணே, பசு கொடுக்கிறதா? நல்ல விலைக்கு வாங்கறான்'' எனக் கர்ஜித்துக் கொண்டே வந்தான் மஸ்தான் சாயபு. அவன் இடுப்பில் கட்டியிருந்த தோல் பெல்ட்டில் கசாப்புக் கத்தி பள பள வென்று மின்னிக் கொண்டிருந்தது. அக் கத்தி அவன் மனதைச் சர சர வென்று அறுக்க ஆரம்பித்தது. அவன் கண் முன்பாக லக்ஷிமியை அறுத்துக் கடையில் மாட்டியிருப்பதாகக் கண்டான். வெறி கொண்டவனைப் போல மஸ்தான் சாயபுவை வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டே லக்ஷிமியை இழுத்துச் சென்றான்.

"லக்ஷ்மி உன்னை நான் விற்க மாட்டேன். நான் அவ்வளவு கொடியவன் இல்லை. என் வீட்டிலேயே பிறந்து வளர்ந்தாய். என் வீட்டிலேயே சுகமாக உன் காலத்தைக் கழி. இந்தப் பாபி கையில் உன் உயிரை நான் செத்தாலும் ஒப்படையேன்" என லக்ஷ்மியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு கண்ணீர் பெருகக் கூறினான். இந்நாடகத்தில் ஒன்றும் விளங்காத அவள் அவன் கையை நக்கிக் கொண்டிருந்தாள்.

ஜகத்ரக்ஷக

ஸ்ரீ ஷண்முகன் யந்திரம்

12,58,400 ஜனங்கள் போற்றுவது

ஆறு வருடம் பலன் தரும்.

ஜன வசீகரம், லாட்டரி பந்தயம், வியாபாரம், உத்தியோகம், பலன் தரும். பேய், பிசாசு துற் சொற்பனம் நீங்கும். விவகாரம் வெற்றி, குடும்ப ஒற்றுமை, புத்திர மகிழ்வும், கரும வியாதிகள் குணமாகும் சத்துரு பணிகுவர், தரித்திரம் விலகிவிடும். உண்மையில் (ஸ்திரி புருஷர்) காதல் வெற்றி தரும். ஸ்திரிகள் அணிந்தால் மேல் சொல்லிய பலன் தருவதும் சூதகவலி உற்பவ சின்னங்கள் தீரும். குழந்தைகள் அணிந்தால் சகடை பாலரிஷ்டம், பக்ஷி தோஷம் முதலிய 4448 தோஷங்கள் தீரும். ரூ. 2.

மாந்திரீக மருத்துவ ஆபீஸ், (c)

வாலாஜாபாத் P. O. S. I. R. சென்னை.

பழிக்குப் பழி

கே. வி. ஜகன்னுதன்

"ஏன் வள்ளி, இன்றைய தினம் நீ வருவதற்கு ஏன் இவ்வளவு நேரம்? உனக்காக நான் எவ்வளவு நேரம் காத்துக் கொண்டிருந்தேன் தெரியுமா?" என்று அன்பாகத் தன் காதலியைக் கடிந்துகொண்டான் தங்கவேல்.

"எஜமானன் வீட்டில் இன்று விசேஷம் என்று நேற்று சொல்லி இருந்தேனல்லவா, அதனுல்தான் இவ்வளவு நேரம்."

"சரி, அதோ பார்! அப்பாகூட பார்த்துக் கொண்டிருக்கிருர். சீக்கிரம் கிளம்பு சந்தைக்கு. நாம் அரைமணி முன்னதாகவே கிளம்பி யிருக்கவேண்டும்," என்று துரிதப்படுத்தினுன் தங்கவேல்.

இருவரும் ஒன்ருக வருவதைக் கண்களால் கண்டு களித்துக் கொண்டிருந்தான் சடையன். அவர்கள் இருவரையும் சேர்ந்து பார்க்கும் பொழுதெல்லாம் அவனுக்கு அக்காளின் ஞாபகம் வரும்.

"இந்தா சடையா, குழந்தையை உன்னை நம்பி விடுகிறேன். நல்லதோ,கெட்டதோ எல்லாம் உன்பாடு. எப்படியாவது அவளைத் தங்கவேலுக்கு கட்டிக்கொடுத்து விடு. அதுதான் என் வேண்டுகோள்." என்று சாகும் சமயம் அக்காள் கூறிய வார்த்தைகள் அவனுடைய இதயத்தில் பதிந்திருந்தன.

சடையன் மிகவும் ஏழைதான். ஓர் சிறு குடிசை. அதைச் சுற்றி ஓர் தோட்டம். இவைதான் அவனுடைய சொத்து. தினமும் காலை முதல் மாலை வரை அத்தோட்டத்தில் நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைப்பான். அத்தோட்டமும் நன்றி மறவாமல் அவன் குடும்பத்தை சம்ரட்சித்துக் கொண்டிருந்தது.

சடையன் வீட்டில் அவனைத் தவிர இருவர்தான். தங்கவேல் அவனுடைய ஒரே பிள்ளை. பெயருக்குத் தகுந்தாற்போல் தங்கமான குணமுடையவன். வேறு வேலை ஒன்றுமில்லாததால் தந்தையுடன் தோட்ட வேலை செய்து கொண்டிருப்பான். வள்ளி சடையனின் அக்காள் மகள். பிறந்து சில மாதங்களிலேயே தாய் இறந்து விட்டதால் வள்ளியை வளர்த்தது முழுவதும் சடையன்தான். தன் அக்காளிடம் சடையன் உயிரையே வைத்திருந்தான். சில சமயம் அவளைப் பற்றி நினைக்கும் பொழுது அவனையறியாமலே துக்கம் நெஞ்சை அடைத்துக்கொண்டு வரும். ஆனுல் அக்காளின் மேல் இருந்த பிரியத்தால் வள்ளிக்குக் கேட்டதை யெல்லாம் வாங்கிக் கொடுத்து தன் புத்திரனைப் போலவே வளர்த்து வந்தான். வள்ளியும் இப்பொழுது 17 வயதை அடைந்து விட்டாள். அதிக அழகில்லாவிடினும் சேற்றிலுதித்த தாமரை போல் இருந்தாள் அவள்.

பிறந்தது முதல் வள்ளியும், தங்கவேலும் ஒருவரை யொருவர் பிரிவதேயில்லை. வள்ளி, ஓர் நாள் வீட்டிலில்லா விட்டால் தங்கவேலுக்கு நெருப்பி விருப்பது போலிருக்கும். காலை முதல் மாலைவரை இருவரும் பிரிந்திருப்பது அவர்களுக்கு மிகவும் கடினமாயிருந்தது. சிற் சில சமயங்களில் அவர்களிருவரும் மாலை நேரத்தில் தோட்டத்தில் ஒன்ருக வேலை செய்வதுண்டு.

" இந்தா வள்ளி, இதை நீ கொத்த வேண்டாம். அதோ இருக்கும் புல்லைப் பிடுங்கு. நான் கொத்துகிறேன்." என்று கடினமான வேலையைத் தான் செய்ய முற்படுவான் தங்கவேல். கொஞ்சம் கடினமான வேலையை, வள்ளி செய்வதைப் பார்க்க அவன் மனம் சகிக்காது.

இவர்களிருவருக்கு மிடையே உள்ள அன்பைக் கண்டு அதிக சந்தோஷமடைந்தவன் சடையன்தான். இருவருக்கும் கூடிய சீக்கிரம் மணம் முடித்து விடவேண்டுமென்று அவன் மிகவும் துடித்துக்கொண்டிருந்தான். ஆனால் வேண்டிய பணம் இல்லாததால் கொஞ்சம் கொஞ்சமாக ஒத்திப் போட்டுக்கொண்டே வந்தான்.

* * *

அந்திப் பொழுது. ஆதவன் தன் வேலையை முடித்துக்கொண்டு உலகத்தினிட மிருந்து விடைபெற்றுக் கொண்டிருந்தான். பகலெல்லாம் மானிடரைப் பரதவிக்கச் செய்த அவன் கிரணங்கள் அப்பொழுது சக்தியற்று இருந்தன.

அப்பொழுதுதான் சடையனின் தோட்ட வேலை முடிந்தது. மிகவும் ஆயாசத்துடன் அவனுடைய குடிசை வாசலில் ஓர் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தான். தங்கவேல் அன்றையதினம் சந்தைக்குச் சென்றிருந்தான். திரும்பி வர இரவு 8 மணியாகும். வள்ளி சடையனின் பக்கவில் உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

" அதோ மருதீசன் வருகிறாரப்பா" என்று சற்று தூரத்தில் வந்துகொண்டிருந்த ஒரு இளைஞனைச் சுட்டிக் காட்டிவிட்டு அங்கிருந்து எழுந்து சென்றாள் வள்ளி. சடையனை அவள் 'அப்பா' என்று கூப்பிடுவதுதான் வழக்கம்.

மருதீசன் சடையனுடைய தோட்டத்திற் கடுத்தாற்போல் வசித்து வந்தான். அவனும் ஓர் குடியானவன் தான். ஆனால் அவனுடைய தோட்டம் சடையன் தோட்டத்தை விடப் பன் மடங்கு பெரியது. கொஞ்சம் பணக்காரனும்கூட.

"என்ன மருதை, ரொம்பநாளாய் உன்னைக் காணோம். வேலை கடுமையோ?" என்று மருதீசனை அன்பாக வரவேற்றான் சடையன்.

"வேலை ஒன்றும் அதிகமில்லை. சும்மா பார்த்துவிட்டுப் போகலாமென்று தான் வந்தேன்... தங்கவேல் எங்கே?........."

ஆனால் மருதை "சும்மா" வரும் வழக்கம் கிடையாது என்பது சடையனுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் விஷயத்தைக் கிளற அவன் விரும்பவில்லை. தோட்டத்தைப் பற்றியும், கிராமத்தைப்பற்றியும் சுமார் அரைமணி நேரம் பேச்சு நடந்தது. அதற்குமேல் மருதையால் பொறுக்க முடியவில்லை.

" சடையா! ஓர் விஷயம். கோபித்துக்கொள்ள மாட்டாயே." என்று மெதுவாக ஆரம்பித்தான் மருதை.

" என்ன விஷயம்?"

" வள்ளியை எனக்குக் கட்டிக் கொடுக்க உனக்குச் சம்மதம் தானா?

" என்ன ? நிஜமாகவா கேட்கிறாய்?"

"நிஜமாகத்தான். அவளுக்கும் வயதாகி விட்டது. எனக்கும் அவள்மீது நெடுநாளாய் ஆசை. எனக்கு சொத்து இல்லையா? சுதந்திரம் இல்லையா? நான் உழைத்து அவளுக்குச் சோறு போடுகிறேன். அவள் இங்கிருக்கும் துரும்பைக்கூட எடுத்து அங்குபோட வேண்டாம்" என்று அடுக்கிக் கொண்டே போனான் மருதை.

சடையன் பதில் சொல்லத் தயங்க வில்லை. ஏனெனில் மருதைக்கு வள்ளியை மணம் புரிந்துகொள்ள விருப்பம் என்பது அவனுக்கு முன்னமேயே தெரியும். ஆனால் எப்பொழுது தன்னை மருதை கேட்கப் போகிறான் என்று எதிர்ப்பார்த்துக்கொண் டிருந்தான் சடையன்.

"உன் குணத்தைப் பற்றி எனக்கு சந்தேகமில்லை மருதை, ஆனல்......"

"ஆனல் என்ன?"

"வள்ளியை வேறொருவனுக்கு கட்டிக் கொடுக்கச் சம்மதித்து விட்டேன்.

"யாருக்கு?"

"தங்கவேலுக்குத்தான். இது உனக்குத் தெரியாதா என்ன?"

மருதையின் ஆத்திரத்திற்கு அளவேயில்லை. ஆனல் கோபத்தைக் கூடிய மட்டும் அடக்கிக்கொண்டான் அவன்.

"ஏன் சடையா, தங்கவேலை விட நான் எதில் கெட்டுப்போய் விட்டேன். பணத்திலா? குணத்திலா? அழகிலா?"

"மறுபடியும் நீ சொல்வதையே சொல்லிக்கொண் டிருக்கிறாயே மருதை! நிச்சயம் செய்தாய் விட்ட பிறகு அதைப்பற்றி என்ன பேச்சு?" அதற்குமேல் மருதையால் பொறுக்க முடியவில்லை.

"அப்படியானல் எனக்கு வள்ளியைக் கட்டிக் கொடுக்க முடியாதா? இதுதானே கடைசி பதில்?" என்று மிகவும் ஆத்திரத்துடன் கேட்டான் மருதை.

"ஆம்"

சடையனின் குரலில் கொஞ்சம் கூட மாறுதலேயில்லை. அதே பொறுமை.........அதே சாந்தம்.

"பார்த்துக்கொள்வோம்" என்று முறுக்காகக் கூறிவிட்டு எழுந்து வெளியேறினன் மருதை.

மூன்று நாட்கள் கழிந்தன. அன்றைய தினம் கிராமத்தில் ஒரே அல்லோலகல்லோலம். கிராமத்து ஜனங்கள் அனைவரும் சிறு சிறு கூட்டமாகக்கூடிப் பேசிக்கொண் டிருந்தார்கள்.

மருதீசனின் கோபம் வீணுகப் போகவில்லை. எவ்விதமாகத் தங்கவேலுவை ஒழிக்கவேண்டு மென்று ஓர் இரவு முழுவதும் யோசனை செய்தது அவன் மனம். அவனுக்கு நகரத்தில் கொஞ்சம் பழக்க முண்டு. சில வக்கீல்களையும் தெரியும். சட்ட மூலமாக தங்கவேலுவை ஒழிக்க விரும்பினன் மருதை. அந்த இரண்டு நாட்களிலும் மருதைக்கு ஓச்சல் ஒழிவில்லை. உழைப்பையும் பணத்தையும் செலவிட்டு பொய்ச் சாக்ஷிகளை நிமிஷத்தில் தயாரித்தான் மருதை.

மூன்றும் நாள் காலையில் தங்கவேல், மருதையின் நெல் களஞ்சியத்திற்கு நெருப்பு வைத்து விட்டதாக கிராம முனிசீப் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டது. மருதையின் சார்பாக ஒருவர் பின் ஒருவராக சாட்சி சொல்ல பலர் முன் வந்தார்கள். முதல் நாளிரவு மருதையின் வீட்டருகில் தங்கவேலுவைப் பார்த்ததாக ஒரு சாட்சி. கையில் ஓர் தீவட்டியை வைத்துக் கொண்டு இருந்ததைப் பார்த்ததாக மற்றொரு சாட்சி. மருதையின் நெற்களஞ்சியம் எரியும் பொழுது தங்கவேல் தலை தெறிக்க ஓடிக்கொண்டு இருந்ததைப் பார்த்ததாக பிறிதொரு சாட்சி.

பணமல்லவா!

வழக்கின் முடிவு சடையனின் மனதைப் பிளந்து விட்டது. பத்து நாட்களில் மருதைக்கு தங்கவேல் ரூ 200 நஷ்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று தீர்ப்பாயிற்று.

ஆனல் சடையனின் துன்பங்கள் இத்துடன் முடியவில்லை. வழக்கின் முடிவைவிட அதிகமான துன்பம் ஒன்று அவனுக்காகக் காத்திருந்தது.

அதற்கு மறுநாட் காலை முதல் தங்க வேலுவை அக் கிராமத்திலேயே காணேம்...............பாவம்! 200 ரூபாய்க்கு அவன் எங்கே போவது?

* * *

மேற்கண்ட சம்பவங்கள் நடந்து இரண்டு வருடங்கள் கடந்தன. காலை நேரம், தன் குடிசை வாசலில் ஓர் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டிருந்தான் சடையன். முன் னிருந்த சடையனுக்கும் இப்பொழுது இருக்கும் சடையனுக்கும் எவ் வளவோ வித்தியாசம். முன்னிருந்த சடையனுக்கு வியாதி என்றால் என்ன என்று கூடத் தெரியாது. ஆனல் இப்பொழுது இருக்கும் சடையனுக்கு அது சர்வ சகஜம். முன்போல் எல்லாம் இப்பொழுது சடையனுக்கு வேலை செய்ய முடிவ தில்லை. உழைப்பு வேலையெல்லாம் வள்ளிதான் பார்த்து வந்தாள். அவ ளுக்கு இன்னும் கல்யாணமாகவில்லை.

ஒரு நாளுமில்லாத திருநாளாக தன் குடிசைக்கு தபால்காரன் வருவதைப் பார்த்ததும் சடையனுக்கு ஆச்சரிய மாக இருந்தது.

ஓர் நீண்ட காக்கிக் கவரை கொடுத்து விட்டுச் சென்றான் தபால் காரன். "வள்ளி! வள்ளி!!" என்று கூப்பிட்டுக் கொண்டு உள்ளே சென் றான் சடையன். அவளை விட்டுப் படிக் கச் சொல்லலாம் என்பது அவன் எண் ணம். அவன் படிப்பதானல் மிகவும் சிரமத்துடன்தான் படிக்கவேண்டும். இப்பொழுதெல்லாம் அவன் கண்கள் சரியாகத் தெரிவதில்லை.

கவரைப் பிரித்துப் படிக்க ஆரம்பித் தாள் வள்ளி. திடீரென்று அவள் முகம் காகிதம்போல் வெளுத்துப் போயிற்று. கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பொழிந்தது.

"அப்பா!...........அப்பா!! தங்க வேல் இரண்டு வருடங்களுக்கு முன் னல் பட்டாளத்தில் சேர்ந்தாராம். நான்கு நாட்களுக்கு முன் அவர் யுத் தத்தில் கொலை செய்யப்பட்டு விட்ட தாக யுத்த ஆபீஸிலிருந்து கடிதம் வந்திருக்கிறது."

இதற்குமேல் அவளால் பேச முடிய வில்லை. கடிதத்தை அப்படியே எறிந்து விட்டு உள்ளே ஓடினள் வள்ளி.

* * *

மறு நாட்காலை சடையன் எழுந் திருந்ததும் வழக்கம்போல் வள்ளியை எழுப்பச் சென்றான். ஆனல் அவள் எப்பொழுதும் படுத்துக்கொள்ளும் இடத்தில் அவளைக் காணததால் சடையனுக்கு ஏற்பட்ட ஆச்சரியத் துக்கு அளவேயில்லை. உடனே வீடு முழுவதும் தேடினன் சடையன். பிறகு தோட்டம் முழுவதும் தேடி யாயிற்று. ஆனல் வள்ளியைப் பற்றிய தகவலே இல்லை. களைத்துப்போய் தன் கயிற்றுக் கட்டிலில் வந்து உட் கார்ந்தான் அப்பொழுது தான் அதன்மேல் இருந்த ஒரு கடிதம் அவன் கண்ணில் பட்டது. எழுத்து வள்ளியுடையது என்று அறிந்தவுடன் அதை எடுத்துத் தட்டித் தடவிப் படிக்க ஆரம்பித்தான் சடையன்:—

"அப்பா, என்னை மன்னிக்க வேண் டும். தங்க வேலுடன் நான் பிறந்தது முதல் வாழ்ந்துவிட்டேன். இனி அவ ரில்லாமல் என்னல் இருக்கமுடியாது. அவரைப் பின் பற்றுவதுதான் நான் செய்யக்கூடியது. ஆனல் அவருக்காக நான் இவ்வுலகில்செய்யக்கூடியது ஒன் றுண்டு. அதைச் செய்துவிட்டுத்தான் நான் செல்லப்போகிறன். நாளை காலை பாவி மருதீசன் இவ்வுலகில் கண்டிப் பாக இருக்கமாட்டான். என்னைக் கொலைகாரி என்று உலகம் தூற்றலாம். ஆனல் எனக்கு அதைப்பற்றியே கவலை இல்லை. தங்கவேலுவின் சார்பாக அவன் மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய ஒரே அவா. வள்ளி."

இதுதான் சடையனின் வாழ்க்கை யில் கடைசி இடி.

பேய்க் காற்று

G. T. ஷண்முகசுந்தரம்

அந்தச் சமயத்தில், எந்தப் பத்திரிகையை எடுத்தாலும், அவன் கதை ஒரு தனி சோபையுடன் பிரகாசிக்கும். பிரசித்தி பெற்ற எழுத்தாளனான உதயகுமாரன், மறுமலர்ச்சி எழுத்தாளர் கோஷ்டியிலே, ஒரு தினகரனைப்போல் விளங்கினன்.

அவனுடைய எழுத்துக்களிலே ஜீவன் ததும்பும். சிருஷ்டிகளில் பாவ உணர்ச்சி பொங்கும். கதா பாத்திரங்களின் மனோபாவங்களை, அப்படியப்படியே படம் பிடித்துக் காட்டக் கூடிய ஆற்றல் படைத்த உதயகுமாரன், ரஸிகர்களால் பெரிதும் போற்றப் பட்டதில் வியப்பில்லை.

2

"ஸார்! தபால்!", என்ற குரலைக் கேட்டதும் ஜெயலெட்சுமி வெகு அவசரமாய் வீட்டிற்குள்ளிருந்து வெளியே வந்தாள்.

அன்று "தென்றல்" பத்திரிகை அவசியம் வரும் என்பது அவளுக்குத் தெரியும்.

வெகு அவசாமாய்ப் பத்திரிகையை வாங்கி உடைத்து நெடுகப் புரட்டிக் கொண்டே வந்தாள்.

ஒரு பக்கத்தில் "சிதைந்த இதயம்" என்று ஒரு கதை இருந்தது. அது உதயகுமாரனல் எழுதப்பட்டது.

ஹாலில் போட்டிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு, வெகு ஆர்வத்துடன் அக்கதையைப் படிக்கலானள்.

அது ஒரு வாழ்க்கைச் சித்திரம்; பெண்களின் மனோதத்துவம் தெரியாத ஒரு கணவனுக்கு ஒரு யுவதி வாழ்க்கைப் படுகிறாள். அந்த "மூரட்டு ஆத்மா" அவளைப் படுத்தும் கஷ்டங்கள் அளவிறந்தன. அவள் வாழ்க்கையில் சலிப்படைகிறாள். அச் சமயத்தில், ஒரு பிரபல எழுத்தாளனின் சந்திப்பு, அவளுக்கு எதிர்பாராமல் கிடைக்கிறது. அவளுடைய வரண்ட வாழ்க்கையிலே, ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்படுகிறது. தன் கணவனைவிட்டுப் பிரிந்து, அக் கலைஞனோடு சேர்ந்து வாழ்க்கை நடத்துகிறாள். அவனது கற்பனை சக்திகள், அவளது காதலைப் பெருக்கின. இருவரும் இன்பமாய் வாழ்க்கை நடத்துகிறார்கள்......

கதையைப் படித்து முடித்துவிட்டு, ஜெயலட்சுமி ஒரு பெருமூச்சுவிட்டாள். அக்கதையில் தீட்டப்பட்டிருந்த கதா நாயகிக்கும் தனக்கும், ஏதோ ஒரு ஒற்றுமை இருப்பதாக அவளுக்குத் தோன்றியது.

ஜெயலட்சுமிக்கு மணமாகி, இரண்டு வருஷங்கள் தான் ஆயின. கலா ரஸிகர் கோஷ்டியிலே அவள் ஒரு தீவிரவாதி என்று கூறலாம்.

ஆனல்...அவளுடைய கணவன்?

ஜெயராமனுக்கு ஏராளமான சொத்துகளிருக்கின்றன. ஆனல் அவனுக்கு ஜெயலட்சுமி நினைப்பது போல் கற்பனசக்தி கிடையாது. கலையறிவு கிடையாது.

தனது வாழ்க்கையையே ஒரு யந்திரம்போல் நடத்தி வந்தான்.

பூர்ண சந்திரனும், ஒய்யாரத் தென்றலும், அவன் உள்ளத்திலே எத்தகைய தெய்வீக உணர்ச்சியையும் ஊட்டியதில்லை. தன்னுடைய உணர்ச்சிக்கு ஒரு கருவியாக தன் மனைவியை அவன் பாவித்து வந்தான்.

ஜெயலட்சுமி இதற்கு நேர் விரோதமானவள். கலா உணர்ச்சியும், கற்பனு சக்தியும் அவள் உள்ளத்திலிருந்து சதா பொழிந்து கொண்டிருக்கும். மனோகரமான சந்திர கிரணங்களின் சாயையில், தன் கணவனோடு சல்லாபம் செய்ய விரும்புவாள். இயற்கையன்னையின் அழகை, தன் வாழ்க்கைத் துணைவனைச் சேர்த்துக்கொண்டு, அள்ளி, அள்ளிப்பருக அவாவுவாள். அஸ்தமனம் ஆனதும், கூரையில்லா மேன் மாடியில் தனியாகப்போய் நின்று கொண்டு, ஆகாயத்தைப் பார்த்தபடியே நிற்பாள்.

தாரகைக் கூட்டங்களின் கண் சிமிட்டல்களும், மேகத்திரைகளின் பவனியும், நீலவானின் நிர்மலத் தோற்றமும், அவள் உள்ளத்திலே ஒரு வரம்புகட்ட முடியாத மகிழ்ச்சியைப் பெருக்கும்.

அவள் கணவனுக்கு ஜெயலட்சுமியின் செய்கைகளொன்றும் பிடிக்கவில்லை.

"இரவு நேரங்களில் தனியாக அங்கு என்ன செய்கிறாய்?" என்று கடிந்து கொள்ளுவான்.

சல்லாப மஞ்சத்திலே ஊடலேற்பட்டு விட்டால், பேசாமல் திண்ணையிற்போய்ப் படுத்து விடுவான்.

இவைகளை யெல்லாம் எண்ணி எண்ணி அவள் அநேகந்தடவைகளில் அழுதிருக்கிறாள். "இவனும் ஒரு மனிதப்பிறவி தானா?" என்று ஏக்கங் கொள்வாள்.

தன்னுடைய கணவனின் அறியாமைக்கு முதன் முதலில் அவள் இரக்கங் கொண்ட போதிலும் அது நாளடைவில் வெறுப்பாக மாறி விட்டது.

இவ்வாறு தனது 'விருதா'வான வாழ்க்கையைப்பற்றி எண்ணிக் கொண்டிருந்த ஜெயலட்சுமி, "தென்றல்" பத்திரிகையை எடுத்துக் கொண்டு தன் அறைக்குள் நுழைந்தாள்.

மேஜையின் மேலிருந்த பேனுவை எடுத்து 'கிடு கிடு'வென, ஒரு கடிதம் எழுதலானுள்.

3

வழக்கம்போல் அன்று உதய குமாரனுக்கு ஏராளமான கடிதங்கள் வந்திருந்தன. அவனுடைய காரியதரிசி ஒவ்வொரு கடிதமாகப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒவ்வொன்றிலும், அவ்வொப்பற்ற எழுத்தாளனை, வானமளாவப்போற்றப் பட்டிருந்தது. இடையிலே கவர் ஒன்று, 'பிரைவேட்' என்ற குறிப்புடன் வந்திருந்தது.

அதை எடுத்துப்போய் காரியதரிசி உதய குமாரனிடம் கொடுத்தான்.

அந்தக்கடிதத்தில் எழுதி இருந்த விஷயங்கள் அவனை வியப்புக்கடலில் மூழ்கச் செய்து விட்டன.

அதில் எழுதி இருந்தது இது தான்.

"அன்பரே!—தங்களின் 'சிதைந்த இதயம்' என் வாழ்க்கையில் ஒரு வழி காட்டியாக உபயோகப்பட்டது. தங்கள் கதா நாயகியின் நிலையில் தான் நான் இருக்கிறேன்............ எனது உடலையும் உயிரையும் தங்களுக்கு அர்ப்பணிக்கத் தயாராக இருக்கிறேன். தாங்கள் ஏற்றுக் கொள்ளாவிடில் இயற்கை அன்னையிடம் அதை ஒப்புவித்து விடுவேன். இது நிச்சயம்! வணக்கம். தங்களின்; ஜெயலட்சுமி".

உதய குமாரன் ஒரு பிரசித்தி பெற்ற கற்பனுவாதி தான்!

ஆனல் அவன் உள்ளம்......?

நாற்ற மெடுத்த சேற்றுக் கும்பியிலிருந்து, தாமரை மலர்கள் கிளம்புவதைப் போல், காம விகாரம் ததும்பும் அவன் உள்ளச் சேற்றிலிருந்து கற்பன சிருஷ்டிகளாகிய பதுமங்கள் மலரும்.

அவன் சிருஷ்டிக்கும் கதாபாத்திரங்களின் குணபாவங்களுக்கு நேர் மாருக உள்ளவன் உதயகுமாரன். அவனுக்கு வயது இருபத்தைந்து தான் இருக்கலாம்.

அவனது அந்தரங்க வாழ்க்கை அனேகருக்குத் தெரியாது. பல பெண்டிரோடு கூடிப்பெறும் இன்பம் மஹத்தானது என்பது அவன் எண்ணம்.

அவன் வாழ்நாளில் இவ்விதமான கடிதம் அவனுக்கு வந்தது கிடையாது.

ஆகவே கட்டுக்கடங்கா மகிழ்ச்சியோடு, பிரயாணத்திற்குத் தயார் செய்யும்படி காரியதரிசியை ஆக்ஞாபித்தான்.

4

ஜெயலட்சுமியின் மோகன ரூபத்திலே மயங்கிய உதயகுமாரன், அவள் கணவனுக்குத் தெரியாமல், அவளைக் கடத்தி வந்து விட்டான்.

அவள் புறத்தோற்றத்திலே, பொலிந்த காந்தி, அவள் அகத்திலும் நிலவுவதைக்கண்ட உதயகுமாரன் அளப்பரிய ஆனந்தங் கொண்டான்.

தன் மனைவியைப் பிரிந்த ஜெயராமன் அதற்காக அதிகக் கவலைப்படவில்லை. **மறு விவாகம் அவன் மனதைத் தேற்றியது.**

அந்தப் புத்துணர்ச்சி கொண்ட காமுகரிருவரும் சிலமாதங்கள் வரை, எல்லை யில்லா மகிழ்ச்சியோடிருந்து வந்தனர்.

கொந்தளித்துக் கொண்டு வரும், அன்பு வெள்ளம் கரை புரண்டோட, தனது மெல்லிய பூங்கொத்தால்,ஜெயலெட்சுமி அவனைத்தழுவும் பொழுதும், உத்வேகமிக்க ஊடல்கள் புரியும் பொழுதும், உதயகுமாரன் இதயம் மகிழ்ச்சியின் எல்லைக் கோட்டையை எட்டிப் பிடிக்கும்.

ஆனல் நாளடைவில்.........!

நாளடைவில் என்ன...?

அந்த எழுத்தாளி வண்டுக்கு, இம்மலர் திகட்டிப் போய் விட்டது.

ஆம்! ஜெயலட்சுமி தன் சாசங்களால், அவனுக்குப் போதிய மனே நிறைவை அளிக்கமுடியவில்லை.......

...... அவனுடைய அளவகடந்த கற்பன சிருஷ்டிகளின் பாததூளிக்குக்கூட, அவள் சமமாக இருக்கமுடியவில்லை......

...அவளை வெறுத்தான்!

....அந்த மோகன ரூபத்தில் அவன் முன்கண்ட, காந்தியும் தேஜஸும் இப்பொழுது அவனல் காணமுடியவில்லை......

...,அவளுடன் பேசுவதைக்கூட அவன் அறவே நிறுத்திவிட்டான்.....

......அதன்முடிவு?......

5

வெள்ளாற்றிலே ஒரே கொந்தளிப்புடன் ஜலம் பாய்ந்து கொண்டிருக்கிறது.

ஆற்றுப் பாலத்திலே, பித்துப்பிடித்தவள் போல் உட்கார்ந்திருந்தாள் ஜெயலெட்சுமி.

தனது சென்ற கால நிகழ்ச்சிகளெல்லாம் ஒரு கனவுபோல் தோற்றமளித்தன.

ஆம்! இந்த வாழ்கையே ஒரு கனவு தான்! ஆயுட்காலம் என்ற ஓரிரவு கழிந்ததும் வாழ்க்கைக் கனவிலே நித்தியம் என்று ஒன்று கிடையாது. இதை அப்பேதை ஜெயலட்சுமி அறிய வில்லை.

'சிலு சிலு' வென்று, குளிர்ந்த காற்று, வீசியது. எட்டாம் பிறைச் சந்திரன். மேகத்திரையின் பின்னின்று எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

......வெகு வேகமாக ஆற்றுச் "கமா"வின் வழியாக ஓடிக்கொண்டிருந்த நீர்ப்பெருக்கு, திடீரென்று ஒரு சிறு தேக்கம் கொடுத்து, பின்னர் எப்பொழுதும் போல் ஓடவாரம்பித்தது.

ஆம்! ஜெயலட்சுமியின் வாழ்க்கையிலடித்த பேய்க்காற்று, அவள் ஜீவனை வாரிக்கொண்டு போய் விட்டது.

ரூ. 1,550 இனும்

சித்த வசீகர கவசம்:—ஆண், பெண் யாராயிருப்பினும், எவ்வளவு பிடிவாதமாயிருந்தாலும், நீங்கள் நினைத்த மாத்திரத்தில் வசீகரிக்கப்பட்டு, உங்களுக்கு அடங்கி நடப்பார்கள். விலை:—தங்க மூடியிட்டது ரூ. 6/8. வெள்ளி ரூ. 2/12. தாமிரம் ரூ. 1/15. (3-க்கு விலை ரூ. 5.)

லக்ஷ்மி கவசம்:—ஐச்வர்யம் வேண்டுபவர்கள் இதை அணியவேண்டும். கிருஹக் கோளாறுகளை வென்று வெற்றி அளிக்க வல்லது. மேலும், விரோதிகளை வெல்லும், பரீட்சை, வியாபாரம், உத்தியோகத்தில் வெற்றி அளிக்கும். சந்ததி வேண்டுபவர்கள் இரு கவசங்கள் அணியவேண்டும். ஆணுக்கு ஒன்றும், பெண்ணுக்கு ஒன்றும். விலை:—தாமிரம் ரூ. 1/15. (3-க்கு விலை. ரூ. 5.) வெள்ளி. ரூ. 2/12. தங்கம் ரூ. 6/8. தபால் செலவு தனி. ஆனால் ஒரே தரம் இரண்டு கவசங்கள் வாங்கினால் தபால் செலவு இனும்.

குறிப்பு:—(1) இதற்கு உள்ளதாக உள்ள குணங்கள் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1550 இனும். (2) குணமில்லாவிடில் பணம் வாபஸ். (3) இதை உபயோகிப்பதால் யாதொரு சிரமமும் ஏற்படாது.

Shri Swami Sat Narayan Jeotish Ashram, (C.T.M.) JULLUNDUR CITY.

சகட யோகம்

S. சுப்ரமணியன், B. A.

“ஸார்! நீங்கள் பாலியத்தில் மிகவும் கஷ்டப் பட்டிருக்கிறீர்கள். என்ன, நான் சொல்வது சரியா இல்லையா?” என்று கேட்டார் ஜோசியர்.

“இல்லை என்று யார் சொல்ல முடியும்? கடவுள் போல உண்மையை அப்படியே சொல்லி விட்டீர்களே.” என்றார் ராமு ஐயர்.

“நீங்கள் சொந்த உழைப்பினால் இப்பொழுது ஏதோ ரூ 600 போல பணம் சேர்த்து வைத்துக் கொண்டு பிறர் கையை எதிர் பாராமல் ஜீவனம் நடத்தி வருகிறீர்கள். இதுவும் வாஸ்தவந்தானே?” என்றார் ஜோஸியர்.

“முழுவதும் வாஸ்தவந்தான். இதை எந்தப் பயல்தான் மறுக்க முடியும்?” என்று வீராப்புடன் கூறினார் ராமு ஐயர்.

“உங்கள் நான்கு பையன்களும் பத்தாவது வரைக்கும் படித்தும் வீட்டில் வேலையில்லாமல் உட்கார்ந்திருக்கிறார்கள். இல்லையா?” என்று கேட்டார், ஜோசியர்.

“அதுவும் சரிதான்” என்றார் ராமு ஐயர்.

இவ்வளவும் ராமு ஐயருக்குத் தன் ஜோசியத்தில் மிகவும் நம்பிக்கை உண்டாக வேண்டு மென்பதற்காக ஜோசியர் கேட்ட கேள்விகள். ஆனால் அன்றொரு தினம் ஜோஸியரைச் சந்தித்து ‘இன்னொரு நாள் உங்களிடம் வந்து சாவகாசமாக ஜோசியம் கேட்கிறேன்” என்று சொன்ன போது, தானே இக்கேள்விகளின் விடைகளை யெல்லாம் அந்த ஜோசியரிடம் உளறிவிட்டார் என்பதை ராமு ஐயர் இப்பொழுது மறந்து விட்டார். ஜோசியர் எல்லாவற்றையும் தன் ஜாதகத்திலிருந்து தான் கூறுகிறார் என்றே ராமு ஐயர் நினைத்தார். “இவர் மிகவும் கெட்டிக்கார ஜோசியர் தான்” என்ற நம்பிக்கை பிறந்து விட்டது அவருக்கு. ஜோசியர் விரும்பினதும் இது தானே?

“இப்பொழுது உங்களுக்கு என்ன சொல்ல வேண்டும்?” என்று கேட்டார் ஜோசியர்.

“வருங்கால பலனைப் பற்றித் தங்களிடம் கேட்கலா மென்று வந்தேன்” என்றார் ராமு ஐயர்.

“சரி சொல்லுகிறேன். கொஞ்சம் கணக்குப் போட்டுச் சொல்ல வேண்டும். இருங்கள்” என்று கூறிவிட்டு ஸ்லேட்டின் இரு புறத்திலும் அழித்து ஒரு மணி நேரம் வரை ஏதோ எண்களை யெல்லாம் எழுதினார்.

ஒரு மணி நேரம் ஆனதும், “அப்பாடா! ஒரு முடிவுக்கு வந்தாகிவிட்டது.” என்றார் ஜோஸ்யர்.

“என்ன? என்ன?” என்று ஆவலுடன் கேட்டார் ராமு ஐயர்.

“உங்களுக்குச் சகடயோகம் அடிக்கப் போகிறது ஸார். இன்னும் 6-மாதத்திற்குள் அதன் பலன் தெரிந்துவிடும்” என்றார் ஜோசியர்.

ராமு ஐயர் தம் மூளையைத் துருவித் துருவிப் பார்த்தார். சகடயோகம் என்றால் என்ன என்று ஆராய ஆரம்பித்தார். “ஆமாம், அது ஒரு பெரிய யோகம் என்று நான் கேள்விப் பட்டிருக்கிறேன்.” என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டார்.

ஜோசியரை வேறு கேள்விகள் ஒன்றும் கேட்கவில்லை. இவ்வளவு பெரிய அதிர்ஷ்டம் தனக்கு வரப்போகிற தென்று தெரிந்த பிறகு கேட்பதற்கு வேறு கேள்வி என்ன இருக்கிறது? இத்தகைய பெரிய அதிர்ஷ்டத்தை முன்னதாகவே அறிந்து கூறிய அந்த ஜோசியருக்கு என்ன கொடுத்தாலும் தகும் என்பது ராமு ஐயரின் அபிப்பிராயம். ஆனல் அப்பொழுது அவர் கையிலிருந்தது ஐந்து ரூபாய் நோட்டு ஒன்று தான். அதனல் அப்படியே அதை ஜோசியரிடம் கொடுத்து விட்டு மிகவும் குதூகலத்துடன் வீட்டிற்குத் திரும்பினர்.

* * *

"என்னடி கமலா! நமக்கு வரப்போகும் அதிர்ஷ்டம் எப்பேர்பட்டது தெரியுமா? சகடயோக மாக்கும், சகடயோகம்" என்ருர் ராமு ஐயர் தன் பாரியாளிடம்.

"நான் என்னத்தைக் கண்டேன்" என்ருள் கமலம்.

"நன்னயிருக்கு, அது ஒரு பெரிய யோகமென்று நான் சொல்லுகிறேன். அப்புறம் நீ அதை நம்பமாட்டேன் என்கிருயா?" என்று அதட்டினர் ராமு ஐயர்.

கமலம் பயந்து விட்டாள். "பெரிய அதிர்ஷ்டம் வரட்டுமே. வரவேண்டாமென்ரு நான் சொல்லுகிறேன்." என்று சொல்லிவிட்டு அவள் பேசாமலிருந்துவிட்டாள்.

ஒரு நாள் மத்தியானம் சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கொண்டிருந்த ராமு ஐயர் "அடி கமலம்! அந்த நியூஸ் பேப்பரை எடு" என்ருர்.

அவளும் எடுத்து வந்தாள். அவர் கண்ணில் முதன் முதலில் பட்டது என்ன வென்று நினைக்கிறீர்கள்? "லக்ஷ்மி லாட்டரி சீட்டி"ன் விளம்பரம் தான். மிகவும் ஆவலுடன் அதைப் படிக்கலானர். "மாதத்திற்கு ரூ 100 வீதம் கட்ட வேண்டும். நான் காமாத முடிவில் லாட்டரி குலுக்கப் படும். அதிர்ஷ்டச் சீட்டுள்ளவருக்கு ஐம்பதினயிரம் ரூபாய் கொடுக்கப்படும்" என்று எழுதப்பட்டிருந்தது. ராமு ஐயர் தன் மனைவியிடம் அதைப் படித்துக் காண்பித்தார்.

"கமலம்! இந்த லாட்டரி நமக்குத்தான் கிடைத்தாக வேண்டும்" என்று சொன்னர்.

"எப்படி? ஏன்?" என்று கேட்டாள் கமலம்.

"ஏன? இதைத் தெரிந்து கொள்ள உனக்கு மூளையில்லே?" என்று உருமினர் ராமு ஐயர்.

"ஏதோ பெண் புத்தி தானே" என்ருள் சமலம் பணிவாக.

"கோவிச்சுக்காதே! நான் சொல்றதைக்கேளு" என்று ஆரம்பித்தார் ராமு ஐயர். "நம்மஜோசியர் நமக்குச் சகடயோகம், அதாவது ஒரு பெரிய யோகம் வரப்போறது என்று சொல்லியிருக்கார். அதோடு கூட ஆறுமாதத்திற்குள் அதன் பலன் தெரிந்து விடும் என்றும் சொன்னர். அதனல் இந்த லாட்டரி நமக்குத்தானே" என்ருர் அவர்.

கமலம், "ஐயோ! இந்த லாட்டரி வேண்டவே வேண்டாம். கையிலிருக்கிற பழத்தை விட்டு விட்டு தொரட்டிப் பழத்துக்கு அண்ணாந்து பார்த்தானும் என்கிற கதையாக உள்ளதும் போச்சு நொள்ளைக்கண்ணு என்று ஆய்விடும். நமக்கு இருக்கிறதே போதும்" என்ருள்.

"சீ கழுதை! வாயைமூடு. உன்னைப் போய் யோசனை கேட்டேனே! அபசகுனம் மாதிரி எடுக்கற போதே தடங்கல்" என்று அவள் மீது சீறி விழுந்து விட்டு எழுந்து போய் விட்டார்.

ராமு ஐயர் அந்த லாட்டரி கட்டத் தொடங்கி விட்டார் என்று சொல்ல வேண்டியதில்லை. நான்கு

மாதமும் முடிந்தது. நானூறு ரூபாயும் ஒழிந்தது. லாட்டரியும் குலுக்கப்பட்டது. ராமு ஐயர் அதிர்ஷ்டம் தான் நமக்குத் தெரியுமே. ஐந்தாம் பேஸ்து அடித்த முகத்துடன் வீட்டுக்குத் திரும்பினர்!

"ஜோசியம் ஜோசியம்னு அடித்துக் கொண்டீர்களே. பார்த்தீர்களா ஜோசியத்தை!" என்று முடுக்காகக் கேட்டாள் கமலம், அவர் வீட்டுக்கு வந்ததும்.

"சீ கழுதை! ஜோசியர் மேலா பழியைச் சுமத்துகிறாய்! காரியத்தைக் கையில் எடுத்ததும் தடங்கல் செய்தாயே. அப்பொழுதே எனக்குத் தெரியும். நமக்கு இந்த லாட்டரி வாராதென்று. சனியன்! சனியன்!" என்று அவளை வாயாரத் திட்டினர். இப்பொழுதும் ஜோசியத்தில் இருந்த அபார நம்பிக்கை அவருக்குப் போகவில்லை!

ஜோசியரைப் பார்த்து என்ன இப்படி நடந்து விட்டதே என்று கேட்டு வரலாமென்று, ராமு ஐயர் ஜோசியர் வீட்டைத் தேடிக் கொண்டு போனர். ஆனல் அவர் அங்கு இல்லை. அக்கம் பக்கத்தில் விசாரித்ததில் அவர் அவ்விடத்தை விட்டுப் போய் இரண்டு மாதம் ஆகிவிட்டது என்று தெரிந்தது. நாடோடி ஜோசியர்கள் ஒரே ஊரில் பல நாட்கள் இருந்தால் அவர்களுடைய குட்டு வெளிப்பட்டு விடாதா?

நாட்கள் பல கடந்தன. அவருடைய கோபம் தணியட்டும் என்று கமலம் இதைப் பற்றிப் பேசாமலே இருந்தாள்.

பிறகு ஒரு நாள், "ஆமாம், அதைப் பற்றி வருத்தப்பட்டுக் கொண்டேயிருந்தால் என்ன செய்கிறது? கையிலிருந்த பணமெல்லாம் போய் விட்டது. சாப்பாட்டிற்கு வழியென்ன?" என்று கேட்டாள் கமலம்.

"அதான் எனக்கும் தெரியவில்லை" என்றார் ராமு ஐயர்.

"பின் என்னதான் செய்வதாக யோசனை? எப்படியாவது வயிற்றைக் கழுவியாக வேண்டுமே" என்றாள் கமலம்.

"யோசித்துப் பார்க்கலாம்" என்றார் ராமு ஐயர்.

இராத்திரியும் பகலும் தம்பதிகள் இருவருக்கும் இதே பேச்சுத்தான். கடைசியில் ராமு ஐயருக்குச் சரியான யோசனை ஒன்று தோன்றியது.

"ஏண்டி ஒரு யோசனை. இப்போ கையில் கொஞ்சம் பணம் இருக்கிறது. அதைக் கொண்டு நாலைந்து ஜட்கா வண்டிகள் வாங்கி, நம்மூருக்கும் வாரச் சந்தை கூடுகிற பூவளூருக்கும் ஜட்கா வண்டி சர்வீஸ் வைத்து விடலாமென்று யோசனை. என்ன சொல்றே" என்று கேட்டார்.

"ஐயோ! அது ஒன்றுதான் குறைச்சல். ஊரார் சிரிக்கப் போருர்கள்" என்று கசப்புடன் கூறினள் கமலம்.

ஆனல் இதையெல்லாம் கேட்கும் ஆசாமியா ராமு ஐயர்.

"அதென்னடி அப்படிச் சொல்றே? பிறர் சொத்தைத் திருடுவதை விட இது எவ்வளவோ மேலல்லவா. யார் சிரித்தால் யாருக்கென்னடி. நானே குதிரை வண்டி ஓட்டினலும் ஓட்டுவேன்" என்று தீர்மானமாகச் சொல்லி விட்டார்.

அவர், தான் சொல்லியபடியே ஜட்கா வண்டிகளை வாங்கி, ஆட்களை வைத்துக்கொண்டு வாடகைக்கு விட்டார். இப்பொழுது சர்வீஸில் ஐம்பது வண்டிகளுக்குக் குறையாமல் இருக்கிறது. பூவளூர் ஜோலார்பேட்டை ரஸ்தாவில் இவர் வண்டிகள்தான் ஓடிக்கொண் டிருக்கின்றன.

"என்ன ராமு ஐயரே, சகடயோகம் அடிக்கிறதே!" என்றார் ஜட்காவிலிருந்து இறங்கிய புது ஆசாமி.

"யார்! ஓ ஜோசியரா! ஆம் ஜோசியர்வாள், நீங்கள் சொன்ன சகடயோகத்தில் தான் என் பிழைப்பு நடக்கிறது" என்றார் ராமு ஐயர்.

பாக்யசாலி

என். எஸ். ஸ்ரீனிவாஸன்

அவள் சொன்னாள், "உலகில் பேச்சுக்கும், அனுபவத்திற்கும் சம்பந்தமேயில்லை. படித்தவர்கள், படிக்காதவர்கள், ஏழைகள், பணக்காரர்கள், எல்லோரும் இது விஷயத்தில் ஒன்று தான்" என்று. காரணமின்றி அவள் எதிலும் குறை கூறமாட்டாள்.

ஊரில் எல்லோரும் சொல்லிக் கொண்டார்கள், "அவள் பாக்யமே பாக்யம்! ஏராளமான சொத்து! பட்டுக் கொடிமாதிரி ஆம்படையான்! நல்லபடிப்பு! கொடுத்து வைத்தவள்" என்று அவள் அதிர்ஷ்டத்தைப் பற்றி.

ராஜிக்கு வயது பதினைந்து. இவள் ஆராத்ய தேவதை, ராமுவுக்கு வயது பதினைந்து கூட ஒரு இரண்டு மாசமும். பணக்கார இடத்துப் பையன். அழகைச் சொல்லியே முடியாது. மன்மதன் மாதிரி யிருந்தான். ராஜியின் பெற்றோர்களுக்கு, தங்களுக்கு, இப்படிப்பட்ட வரன் கிடைத்ததில் ஏற்பட்ட ஆனந்தத்தைச் சொல்லியே முடியாது. ராஜிகூட, கலியாணம் ஆன புதிதில் தன்னை விட பாக்யசாலி இவ்வுலகில் இல்லையென்று தான் பெருமையடைந்தாள்.

ராமுவின் படிப்புக்காக ராஜியின் சாந்திமுகூர்த்தம் மூன்று வருஷகாலம் மட்டம் போடப் பட்டு வந்தது. ராமு நல்ல புத்திசாலி; வகுப்பில் அவன் தான் முதல் பையன்! பரீக்ஷைகளில் முதல் வகுப்பிலேயே தேரிக் கொண்டு வந்தான். இப்பொழுது ராமு B. A. படித்து வருகிறான்.

ஊரில் ராஜியைப் பற்றி பொய்க் கற்பனைகள் கொட்டியளக்கப்பட்டன. குளம், குட்டை, கோயில், எல்லா விடங்களிலும் ராஜியைப் பற்றிய பேச்சுத்தான். "நன்னாயிருக்கு! பதினெட்டு வயசுப் பொம்மனாட்டியை ஒத்தர் புக்ககத்தில் கொண்டு விடாமல் வீட்டிலேயே வைத்துக் கொண்டிருப்பாளோ?" என்றுதான் ஊர்ப் பெண்டுகள் வம்பளக்க ஆரம்பித்தனர்.

"அதென்னமோம்மா. அவாள், பையனுக்கு, வேறுகலியாணம் செய்யப் போவதாய்ச் சொல்லிவிட்டார்களாம்" என்பாள் ஒருத்தி.

"ராஜியின் நடத்தையே அவாளுக்குப் பிடிக்கவில்லையாம்" என்பாள் இன்னொருத்தி.

"இல்லாமல் என்னடி; என்ன தான் உறவாயிருக்கட்டும். ஒரு பதினெட்டு வயசுப் பொம்மனாட்டி வெக்கமில்லாமெ இருபது வயசு புருஷனோடு உக்காந்து கேரம் விளையாடுவாளோடி! இது அவாளுக்குத் தெரியாமலா இருக்கும்!" என்பாள் வேறொருத்தி.

ஆனால் விஷயம் வேறு. பிள்ளை படிக்கிறானென்றும் படிப்பு முடிந்ததும் பெண்ணை யழைப்பதாகவும் பிள்ளை வீட்டுக்காரர்கள் சொல்லி வந்தார்கள். ஊர் வம்பளப்பு வேறு மாதிரியாய்ப் போய்விடவே பெண் வீட்டுக்காரர்கள் விஷயம் முதிருவதற்குள் பெண்ணை வலுவில் பிள்ளை வீட்டில் கொண்டு விட்டார்கள்.

ராஜி, வீட்டு வேலை யெல்லாம் செய்து விட்டு இரவு பதினொரு மணிக்குப் படுக்கையைப் போட்டு விட்டு, அறையின் மூலையில் படித்துக் கொண்டிருக்கும் ராமுவிடம் செல்வாள். ''இன்று ரொம்ப புழுக்கமாக இல்லை? சற்று நேரம் வெளித் தாள்வாரத்தில் போய் உட்காருவோமா? சந்திரன் எவ்வளவு அழகாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது?'' என்பாள் ராஜி.

''நாளைக்கு இங்கிலீஷ் பரீக்ஷை. இப்பொழுது இங்கு ஒன்றும் பேசாதே.'' என்று கண்டிப்பாகச் சொல்லி விடுவான் ராமு.

அதற்குமேல் ராஜி ஒன்றும் பேசக் கூடாது. சோகம் நிறைந்த ஒரு பெருமூச்சுடன் ராஜி படுக்கைக்குப் போய்விடுவாள். பிறகு ஒரு மணி காலம் எண்ணாத எண்ண மெல்லாம் எண்ணி மிகுந்த பிரயாசையுடன் கண்ணை மூடுவாள். ஒரு மணி வரையில் படித்து விட்டு ராமு படுக்கையில் வந்து படுத்துக் கொண்டு துப்பட்டியைக் காலிலிருந்து தலை வரையில் இழுத்துப் போர்த்துக் கொண்டு தூங்குவான்.

மறுநாள் ராஜி வெறுப்புடன் படுக்கையில் படுத்துக் கொண்டிருப்பாள். குடு குடுவென்று அவளிடம் ஓடி வருவான். ''ராஜீ! இதோ பார்த்தாயா? இன்று பத்து கேள்விகள் கொடுத்தார்கள். பத்துக்கும் சரியாக ஆன்ஸர் செய்து விட்டேன். அனேகமாய் நூற்றுக்கு 75 மார்க்குகள் கிடைக்கும். எப்படியிருந்தாலும் 70க்குக் குறையாது. எனக்கு எப்படியும், 'பஸ்ட் கிளாஸ்' கிடைத்து விடும்.'' என்று பெருமை யடித்து விட்டு, ''நாளைக்குக் கணக்குப் பரீக்ஷை. இரண்டு மணிவரையில் படிக்கப் போகிறேன்.'' என்று சொல்லி விட்டு விளக்கருகில் சென்று புத்தகத்தைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்து விடுவான்.

ராஜி பதிலே சொல்ல மாட்டாள். சோகம் நிறைந்த ஒரு பெருமூச்சு தான் அவள் அளிக்கும் பதில். என்னென்னவோ எண்ணிவிட்டு கண்ணை மூடிக் கொண்டு படுக்கையில் வீழ்ந்து கிடப்பாள். தூக்கம் வருகிறதா என்ன? அந்த மூன்றாவது எட்வர்ட்டும், இரண்டாவது சார்லஸும் எப்படிக் குட்டிச் சுவராய்ப் போனால் இவளுக்கென்ன? அந்த ரைட் ஆங்கிளும், பெண்டகனும் எப்படி மண்ணாங்கட்டியாய்ப் போனாலென்ன? அல்லது ஷேக்ஸ்பியரின் ஹாம் லெட்டில் ஒரு பாட்டு வாராமல் போய் விட்டால் தானென்ன? அத்துடன் குடி முழுகியா போய்விடும்? இதையெல்லாம் கேட்கும்போது அவள் மனதில் துக்கம் பொத்துக் கொண்டு கிளம்பும்.

பால் போன்ற நிலா. கண்ணையும் மண்ணையும் மயக்குகின்றது. அழகிய மந்த மாருதம் பக்கத்திலுள்ள புஷ்பச் செடிகளிலிருந்து இனிய மணத்தை வாரிக் கொண்டு வந்து சாளரத்தின் வழியாய்ப் படுக்கை யறையில் வீசுகிறது. இதை யெல்லாம் ராமு பொருட் படுத்தவே இல்லை. அவன் உண்டு அவன் பரீக்ஷையுண்டு. அவனுடைய ஆனந்தமெல்லாம் அதில் தான் அடங்கியிருக்கிறது. ஆனால் அதே நிமிஷத்தில் இதையெல்லாம் கண்டு ஓர் ஜீவன் படுக்கையில் பெருமூச்சு விட்டுக் கொண்டே புறண்டு கொண்டு தானிருந்தது.

ராஜிக்கு வீட்டில் அதிகமாகப் பிடித்திருந்தவள் அவ்வீட்டு வேலைக்காரி சொர்ணம் தான். சொர்ணம் எப்பொழுதும் இளைத்த முகத்துடனேயே இருப்பாள். வயது பதினெட்டு பத்தொன்பது தானிருக்கும். சாதாரண அழகு. அவள்

கணவனுக்கு ஓர் மில்லில் பத்து ரூபாய் சம்பளத்தில் ஓர் உத்தியோகம்.

சொர்ணம் ஒரு நாலைந்து ரூபாய் சம்பாதிப்பாள். மூன்று ரூபாய் வாடகை முதல் கனகாம்பரம் வாங்குவது வரையில் இதிலேயே நடந்தாக வேண்டும். ஆனால் இந்த ஸ்வல்ப வரும்படியில் அவர்கள் ஸ்வர்க்க போகத்தை அனுபவித்தார்கள் என்று சொல்லும் படியாய்த் தானிருந்தது அவர்கள் இல்லறம் நடத்திய மாதிரி.

அன்று ஸ்வர்ணம் அவசர அவசரமாய் வேலை யெல்லாம் முடித்துக் கொண்டிருந்தாள்.

"ஸ்வர்ணம்! என்ன இன்றைக்கு இவ்வளவு அவசரம்" என்று கேட்டாள் ராஜி.

"'அசோகா' இன்னு ஒரு ஆட்டம் வந்திருக்காம். அதுக்குப் போக சீக்கிரம் வந்துடச் சொன்னுங்க." என்ருள் ஸ்வர்ணம்.

"உன்னையும் அழைத்துக் கொண்டு போவாரா?"

"'பருப்பு இல்லாமெ கூட கலியாணம் நடக்குமா? நான் இல்லாமெ அவங்க எங்கேயும் போர வழக்கமே கிடையாது"

"உன்னை அழைத்துக் கொண்டு போகாவிட்டால் நீ சண்டை போடுவாயாக்கும்?"

"அவ்வளவு தூரம் அவங்க வெச்சக்க மாட்டாங்க. எனக்கு எது இஷ்டமோ அதை அவங்க வலுவிலே செய்வாங்க. கனகாம்பரத்திலே எனக்கு ரொம்ப இஷ்டம். தினம் வரும்போதெல்லாம் ஒரு செண்டு கனகாம்பரம் வாங்கி வருவாங்க. நான் கூட சில சமயத்திலேயே பணத்தை என் இப்படி செல வழிக்கிறீங்க இன்னு கேப்பேன். 'போடி பயித்தியமே! பணம் நாளைக்கு வரும். இதையெல்லாம் அனுபவிக்கிற காலத்திலே அனுபவிச்சா இன்னு நன்னயிருக்கும்' இன்னு சொல்வாங்க. இவங்க சொல்ரத்திலே நாயம் இருக்கத் தானிருக்கிறது இன்னு நான் மறுபேச்சுப் பேச மாட்டேன். இல்லையா அம்மணி!" என்ருள் ஸ்வர்ணம்.

இந்த வார்த்தையையும் அந்தக் குட்டியின் ஆனந்தத்தையும் கண்ட ராஜியின் பொருமையைச் சொல்லியே முடியாது. ஆனல் அவள் அதை வெளிக்குக் காட்டாமல் "சரி! அப்படியானல் நீ போய்வா!" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்று விட்டாள் ராஜி.

* * *

பத்து வருஷங்களுக்குப் பிறகு.

ராமு B. A., M. A. யெல்லாம் படித்து விட்டு அக்கரைச் சீமைக்குச் சென்று ஐ. ஸி. எஸ். ஸாம் பாஸ் செய்து விட்டான். மதுரையில் அவன் ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டாக நியமிக்கப்பட்டான்.

எவ்வளவோ பெரிய அந்தஸ்து! எத்தனையோ சிப்பந்திகள்! ராமுவினுடையவும் அவன் பெற்றோர்களினுடையவும் ஆனந்தத்தைச் சொல்லவே முடியாது.

ஆனல் இப்பொழுது ராஜியின் முகத்தில் கிழத்தனம், வெறுப்பு இவைகள் தான் காணப்பட்டன. இந்தக் கிடைத்தற்கரிய பட்டத்தைதையும் பதவியையும் அவள் லக்ஷ்யம் செய்யவே இல்லை. அவள் தன் வாழ்க்கையின் இன்னிசையை எப்பொழுதோ இழந்து விட்டதாகக் கருதிவிட்டாள். அனல் இப்பொழுது உலகமோ அவளைப் பெரும் பாக்ய சாலி என்றே சொல்கிறது!

தெருக் காதலர்

வி. ஆர்.

அப்பொழுது பனிக் காலம். இரவு சுமார் எட்டரை மணி இருக்கும். திருப்பறங்குன்றத்திற்கும், மதுரைக்கும் செல்லும் ரஸ்தாவில் ஒரு மணி நேரத்திற்கு முன் இருந்த கலகலப்பு இல்லை. சாலையின் இருபுறங்களிலும் நின்ற மரங்களும் சலனமற்றுத் தூங்கிக் கொண்டே நின்றன. எங்கு பார்த்தாலும் 'வெளேர்' என்று பனி போர்த்தி நின்றது. எக் காலத்திலும் மதுரையிலுள்ள காந்த விளக்குகள் அந்த ரஸ்தாவின் வெகு தூரத்தில் நின்று பார்த்தாலே தெரியும். அன்று படர்ந்திருந்த பனி அந்த ஜ்வாலை போன்ற ஆகாய மளாவிய வெளிச்சத்தையும் காண முடியாமல் அடிர்த்தது.

பனி மேகங்களை சிதற அடித்துக் கொண்டு, ஒரு மோட்டார் மிகவும் மெதுவாக வந்து கொண்டிருந்தது. சீனி மிகவும் கவனமாக, பனியைக் கண்களால் ஊடுருவிப் பார்த்துக் கொண்டு வண்டியை ஓட்டிச் சென்று கொண்டிருந்தான். அவன் வண்டியின் முன் வைக்கப்பட்டிருந்த விளக்குகள் பனியை ஊடுருவிக் கொண்டு வெகு தூரம் வரை ஒளியைக் கொடுத்தன. அந்த வெளிச்சத்தில் யாரோ நின்று கொண்டு கையை ஆட்டுவது தெரிந்தது. சீனி வண்டியை நிறுத்தினன். உற்று நோக்கிய சமயம் அது ஒரு பெண்ணின் உருவம். அவள் ஆயிரம் ஒட்டுகளுடன் போட்டுக் கொண்டிருந்த பழய உடைகளுக்கும் அவள் தேகத்தின் யௌவனத்திற்கும் ஒன்றுக் கொன்று சம்பந்தமேயில்லை. அவள் ஒரு தையல்காரி. அவள் மெதுவாக "ஐயா, நான் மதுரைக்குப் போக வேணும், கொஞ்சம் வண்டியில் இடம் கொடுக்கிறீங்களா ......?" என்று கெஞ்சினள்.

சீனியின் மில் முதலாளி ஒரு கல்நெஞ்சன். மில் பஞ்சு மூட்டைகளை அடுக்கி வரும் வண்டி, நடு வழியில் நிறுத்தப்பட்டது என்றல் அவர் கோபம் கொள்வார். அவன் என்ன செய்வான்? இரக்கம் ஒருபுறம், பயம் ஒருபுறம். அவளை அவனுக்குப் பிடிக்கவும் இல்லை. இந்த தர்ம சங்கடமெதற்கு என்று திரும்பவும் வண்டியில் ஏறினன்.

"ஐயோ...! நடக்க முடியலீங்களே? கொஞ்சம் உபகாரம் செய்யக் கூடாதா?" என்று அவள் கெஞ்சினள்.

சீனிக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை. "சரி...சரி...ஏறி... உட்காரு" என்ருன் வேண்டா வெறுப்பாக.

அந்த வண்டியில் இருவருக்கு மட்டும்தான் இடம் உண்டு. ஆகவே மருதும் அவன் பக்கத்திலேயே உட்கார நேரிட்டது, திரும்பவும் வண்டி பனிப் பிராந்தியத்தை துளைத்துக் கொண்டு சென்றது.

2

மருது மோட்டாரின் சாரதியை உற்று நோக்கினள். ஆனல் சாரதியின் பார்வை பனி மூடிய வழியையே ஊன்றி நோக்கியது.

மருது:—இன்றைக்கு பனி அதிகமாச்சே, உங்களுக்கு இந்த வண்டியைக் கவனமாக ஓட்டுவதும் சிரமம் தானே?......

சீனி:—அதெல்லாம் உனக்கெதுக்கு? உன் பாட்டைப் பாத்துக்கிட்டு போ. (சலிப்புடன்) என் தலையிலே எழுதினது இவ்வளவுதான்...

மருது:— அது இருக்கட்டும். உங்ககோட்டிலே பொத்தான் எல்லாம் விட்டுப் போயிருக்கே. உங்க பெண் சாதிக்கு தையல் வேலை தெரியாதா?

சீனி:—(பெருமூச்சுடன்) நீ சொன்ன அந்த பெண்சாதி ஒன்றும் எனக்குக் கிடையாது...

மருது:—கலியாணம் பண்ணிகிட்டா போச்சு...

சீனி:— எனக்கு கலியாணம் வேணும்... என்று சொன்னான்.

பிறகு அவளுடன் அவன் பேசவே யில்லை. மருது எவ்வளவோ பேச முயன்றும் பயன்பட வில்லை. மறு நிமிஷம் மதுரை வந்து சேர்ந்தான். அங்கு பொது விடத்தில் மருதியை இறக்கி விட்டு விட்டு, அவன் மில்லுக்குள் கொண்டு போய் வண்டியை நிறுத்தினான்.

* * *

மருது ஒரு தையல்காரி.. அவள் பெற்றோர் அவளுடைய சிறு வயதிலேயே விண்ணுலகெய்தினர். ஆகவே குலத் தொழிலைச் செய்து ஜீவனம் செய்து வந்தாள். வயதோ யௌவனம். நல்ல அழகு. எவரும் அவளிடம் பச்சாதாபப் படுவார்கள். திருப்பறங்குன்றத்தில் தைத்த துணிகளை மதுரையில் கொண்டு வந்து கொடுத்து விட்டு வீடு செல்வாள்.

3

சீனி வேலை பார்த்து வந்த மில்லில் முனியனும் வேலை பார்த்து வந்தான். அவன் ஒரு முரடன். மருதுவிடம் காதல் கொண்டிருந்தான். அடிக்கடி அவளை இலவசமாக மதுரைக்கும் திருப்பறங்குன்றத்திற்கும் ஏற்றிச் செல்வான். அந்த வழக்கத்தால்தான் அன்று மருது மோட்டாரை நிறுத்தியதும், அதில் சீனி இருந்ததையும் நாம் முன்பே சொன்னோம்.

சீனியிடம் மருதுக்கு ஒரு அன்பும் அபிமானமும் ஏற்பட்டது. இனிமேல் தான் எப்பொழுதும் அவர் வண்டியில் தான் செல்ல வேண்டும் என்று முடிவு கட்டினாள். "ஐயோ, பாவம்! அவர் கோட்டில் அன்று பொத்தான்கள் கீழே விழுந்திருந்திச்சே, அதற்கு வேறே போட்டிருக்கலாமே..." என்று ஏங்கினாள்.

காலை சுமார் ஏழு மணிக்கே மில் கதவைத் தாண்டி உள்ளே நுழைந்தாள். வழக்கம் போல் அதிகாலையில் எழுந்த சீனி அவன் வண்டியைத் துடைத்து பிரயாணத்திற்கு ஆயத்தப் படுத்திக் கொண்டிருந்தான். மருது மெதுவாக அவன் பக்கத்தில் சென்று நின்று கொண்டு அவன் செய்யும் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவள் அவனுடன் பேசக் கூசினாள். அவன் உண்மையிலேயே மருதியைக் கவனிக்கவில்லை. கருமமே கண்ணாயினான்.

திடீரென்று எழுந்த பொழுது மருதைக் கண்ட சீனி "ஓகோ நீயா, இன்னும் ஐந்து நிமிஷம் இருந்தால் என் வண்டியிலே போகலாம்......" என்று சொன்னான். அவளும் அதற்கு இசைந்தாள்.

4

முனியன் அவ்விடம் ஓடிவந்தான். "மருது, வண்டியிலே ஏறு, போய் ஏறு, சீக்கிரம், என் வண்டி இப்போ போகுது......" என்றான்.

"இல்லை, நான் கொஞ்ச நேரங் கழிச்சி போவேன்" என்றாள் மருது.

"ஏன் இன்னைக்கு ஒரு மாதிரியா இருக்கே...உம்...இன்னைக்கு என் வண்டி வேணும்னு இனிமேல் என் வண்டியிலே உனக்கு இடம் கிடைகாது" என்ருன் முரட்டுத்தனமாக.

இதுவரை மௌனமாயிருந்த சீனி "அது அவளுடைய இஷ்டம்..." என்று சொல்லி வைத்தான்.

முரடனுன முனியனுக்கு கோபம் வந்து விட்டது. "என்னடா...... சொன்னே?......" என்று பல்லைக் கடித்துக் கொண்டு தன்னுடைய முழுபலத்தால் சீனியைத் தாக்கிஞன். "ஐயோ!" என்று அலறியவாறு சீனி வண்டியில் சாய்ந்து நினை விழந்தான்.

"மருது நீ வரப் போகிருயா? இல்லையா?..." என்று அதட்டிஞன்.

அவள் கண்களில் நீர் ததும்பியது. மௌனம் சாதித்தாள். இதற்குள் முனியனுக்கு நேரமாகி விட்டபடியால் அவன் அவ்விடத்தினின்றும் அகன்ருன். அவளும் தன் வழி நடந்தாள்.

5

சீனி கண் விழித்த சமயம் அதிக நேரமாகி விட்டது. அவன் வண்டியில் ஏறிக் கொண்டு அதிவேகமாய்ப் பறந்தான். மருதுவை அவன் மனம் வெறுத்தது. அவளால் அவனுக்கு ஏற்பட்ட இழிவை நினைத்த சமயம் கோபமும், வெட்கமும் பொங்கி எழுந்தன, அவன் உள்ளத்தில். அவள் ஒரு சதிகாரப் பெண் என்றும், துன்பம் இழைக்கும் துஷ்டை என்றும் அவன் மனதில் தோன்றிற்று.

* * *

இன்னும் பனிக் காலம் முடிய வில்லை. இரவு எட்டு மணி. மூடுபனி உலகை அந்தகாரத்தில் மூழ்கி விட்டது. சிற்சில சமயம் மழை பெய்வது போலும் தோன்றிற்று. சீனியின் கண்கள் பஞ்சடைத்தது போலாயிற்று. ஆனுலும் மனம் தளராமல் வண்டியைக் கவனமாக ஓட்டிச் சென்ருன்.

அவனுக்கு முன்னுல் சற்று தூரத்தில் யாரோ கையை அலைப்பது போலிருந்தது. மறு தடவையும் மருதுதான். இந்தத் தடவை அவன் வண்டியை நிறுத்த வில்லை. அவன் உதடுகள் கோபத்தால் முணு முணுத்தன. அவனுக்கு இருந்த கோபத்தில் அவள் மேல் வண்டியை ஏற்றி பழி வாங்கியிருப்பான், அவள் ஒரு யௌவன தேவதையாக இல்லாதிருந்தால்.

மறு நிமிஷம் "சீனி!...சீனி!!... கொஞ்சம் நிறுத்து, நிறுத்து......" என்று அலறிஞள்.

அவன் செவிகள் செவிடாயின. அந்த வார்த்தைகளைக் கவனிக்க வில்லை. அவன் எதிரே சிகப்பு விளக்குகள் பிரகாசித்தன. அந்த ரஸ்தாவிற்கு குறுக்கே உள்ள பெரிய கதவு மூடப்பட்டிருந்தது. மற்ருெரு புறமிருந்து ரயில் வந்து கொண்டிருந்தது. ஆகையால் எதிர்பாராத விதமாய் வண்டியை நிறுத்திஞன் சீனி.

6

பின்னுல் ஓடிவந்த மருது சீனியின் வண்டியில் மோதுண்டு "ஆ!" என்று அலறிக் கொண்டே சாய்ந்தாள். சீனி எவ்வளவு வெறுப்படைந்தாலும் அக்காக்ஷி அவனை இரக்கப் படும்படி செய்தது.

ஓடிவந்து மருதியை இரண்டு கைகளாலும் குழந்தைபோலத் தூக்கிஞன். அவளுக்கு அடிபட்ட அதிர்ச்சியில் இலேசாக நினைவிருந்தது. அவளை அவன் உட்காரும் 'சீட்'டில் வசதியாகப் படுக்க வைத்தான். பச்சாத்தாபத்துடன் அவன் "மருது...

மருது" என்று பெரிய பாபத்தை செய்தவன் போல "நான் பாவி, நான் பாவி......உனக்கு எங்கே அடிபட்டது?" என்று கேட்டான்,

"அடி ஒன்றும் பலமில்லே!......" என்று அவள் பகர்ந்தது அவன் ஹிருதயத் துடிப்பின் வேகத்தைக் குறைத்தது.

சீனியும் வண்டியை மெதுவாக ஓட்டிக் கொண்டிருந்தான். சாரதியின் உள்ளத்தின் அலைகளையும், வெளி உலகில் நிலவிய பனி அலைகளையும் சமாளித்துக் கொண்டு செல்வது அதற்கு சிரமம் தானே! அவன் உள்ளம் இளகி விட்டது. அவள் மேல் ஒரு தெய்விக அன்பு கொண்டான். அவள் அவன் மடி மேல் தலைவைத்துப் படுத்துக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் நீர் ததும்பி வழிந்தது. ஆனால் பேச நாவெழவில்லை. அவள் கண்ணீர் அவன் ஆடைகளை நனைத்தது. அவனுக்கு இரக்கம் மேலீட்டது.

பெருமூச்சுகளினூடே அவன் "மருது......நீ என் இவ்வளவு கஷ்டப் படறே! சீனியுடன்...சேர்ந்து. வாழ்ந்தால் என்ன?" என்று சொன்னான்.

"நானும் அப்படித்தான் நினைச்சுட்டேன்......" என்ற பொழுது மருது உதிர்த்த கண்ணீர் ஆனந்தக் கண்ணீராக மாறியது.

இருமலை இன்றே ஒழி!

எத்தனை நாளைக்குத்தான் கஷ்டப்படுவது

துரும்பிலேயே கிள்ளி எறிந்தால் இந்தத் துன்பமேன்!
ஆனாலும் பரவாயில்லை.

சி. எம். சாமி **தாளக பஸ்பம்**

இருமல், இளைப்பு, இழுப்பு, ஈளை, கபம், காசம், குரலடைப்பு, தொண்டைக்கம்மல், தொண்டைவலி, மார்துடிப்பு, க்ஷயம் முதலிய கொடிய வியாதிகளையும் குணப்படுத்துகிறது. மார்பிலும் தொண்டையிலும் ஏற்படும் ரணங்களை ஆற்றி, இருமலை நாளாவட்டத்தில் தணியச் செய்து, கபத்தை அறவே ஒழித்து சளியோடு ரத்தம் வருதல் மஞ்சள் நிறமாக வருதல், கோழை கட்டி கட்டியாய் விழுதல், நடந்தால் இளைப்புக் காணுதல் முதலியவைகளையும் குணப்படுத்துகிறது.

புட்டி 1-க்கு விலை ரூ. 4—0—0. தபால் சார்ஜ் வேறு.

தலைமை ஆபீஸ்: மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S.I.

பிராஞ்சு:—(1) 2/88, அய்யா முதலி தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.
,, (2) 195, செட்டியார் தெரு, கொழும்பு.
,, (3) கதிரேசன் கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

இயற்கை யின்பம்

"இளவலவன்"

இயற்கை யன்னை உலகம் பூத்த அருட் கொடியாகிய மகா சக்தி தான்! அவளது பூரண அழகும், மாட்சியும், அவள்பால் நம்மைப் பற்றி யிழுக்கின்றன.

கவிஞர்கள் தம் கவிதையில் பாடித் திளைத்த ஒரு சில பகுதிகளை நம் மெய்க் கண்முன் கொணர்வோமாயின் நம் அகக் கண் ஆனந்தமடையுமென் பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

வீரமா முனிவர் இயற்றியதும் தமிழறிஞர் "தேன் தரும் விரைமலர்த் தேம்பாவணி" என்று போற்றக்கூடியதுமான நூலிலே அவர் நம் நாட்டின் செம்மையை:—

"விரைவாய்ப் பூந்தாழை யுலாம் வெள் வளைபூ
வயலூர்ந்து மிளிர்முத்தீன்ற
கரைவாய் பூஞ்சுனை பூப்பக் கனியாழ் வண்
டிமிர்ந்தொகரங் களிகூர்ந் தாடுஞ்
சுரைவாய்ப் பூம் பொழில் காய்ப்ப ஈரறமு
முச்சிரும் சுகமோ ரேழு
நிரைவாய்ப் பூங்குடியாக நிமிரித்தா
வியநாட்டு நிலையி தன்றே"

என்று நீர்வளத்தால் பூஞ்சோலைகள் பூத்திலங்குவதாகவும், மதுவுண்ட வண்டுகள் மகிழ்ந்திசை பாடுவதாகவும், ஓகை நிறைந்த மயில்கள் தோகை விரித் தாடுவதாகவும், தேன் சொரியும் சோலைகளிலே தீங்கனிகள் தூங்குவதாகவும் விவரித்துப் பாடும்பொழுது அவ்வியற்கைத் தோற்றம் நம்மனக் கண்முன் எவ் வாறு தாண்டவ மாடுகின்ற தென்பதை உன்னிப் பாருங்கள்!

இதே போன்று மற்றொரிடத்தில்,

"சென்னகம் நீர்பொழியத் தேன்பொழியும்
புன்னகம் திருவிற்பூப்பக்
கன்னக நீருமிழக் கவிநாகம் வெருண்டஞ்சக்
கல்லூ டூர்ந்த
கொன்னகம் ஒப்பமணி கொழித்தருவிபாய்ந்
தோட, கொடுஞ்செய்வாய்ப்ப
பொன்னகமொப்பவளர் புகழித்தாலிய
நாட்டுப் பொலி விதன்றே"

என்று மழைவளம் பொருந்திய மலைகளில் புன்னை மரங்கள் அலர்ந்து தேன் சொட்டுவதாகவும், மலையில் வீழும் மழைநீர் பிளவுகளில் பாய்ந்து பொங்கி எழும்பொழுது அம் மலையில் தங்கி வாழுகின்ற மந்திகள் அஞ்சிக் கலங்கு மென்றும், சிறந்த அம் மலையினிடையே வளைந்து நெளிந்து செல்லும் அப் புதுப் புனல் காட்சியானது காண்பதற்கு ஓர் பாம்புபோல் மலைச் சரிவினின்றும்

வழிந்திறங்குவதாகவும், அவ் வருவி நீர் ஓர் ஆறாகச் சென்று வன்னிலங்களை நன்னில மாக்குவதாகவும் கூறும் நயம், கற்போர் கருத்தைக் கவர்ந்து இயற்கை யின்பத்தில் ஆழ்த்துவதாகும்.

இயற்கை யழகு நிறைந்துள்ள இடங்களெல்லாம் இறையொளி வீசுவ தாகக், கண்டதாகவும் நம் முன்னோர் கூறியிருக்கின்றனர். அவ்வாறு கண்டு சைவசமயத்துக்குப் புத்துயிரளித்த திருஞான சம்பந்தர் தம் பண்ணமைந்த பாடல்களில் குற்றாலத்தின் இயற்கை யழகினைப் படம் பிடித்து அளித்துள் ளார். அதில் நாம் உழன்று களிப்போமாக!

"வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண் டியாழ்செய் குற்றாலம்
அம்பானெய்யோ டாடல் அமர்ந்தான் அலர்கொன்றை
நம்பான்மேய நன்னகர் போலும் நமரங்காள்"

என்று தொடங்கும் பதிகத்தைப் படித்துப் பாருங்கள். உங்களை யறியாம லேயே நீங்கள் பழைய—திருஞான சம்பந்தர் கண்ட—குற்றாலத்தில் பிரவே சித்து விட்டதாக ஒருவித மகிழ்ச்சி கொள்வீர்கள்!

இயற்கை யழகிலும், இயற்கை வளத்திலும் தனக்கு நிகரில்லையென இறு மாப்புடன் விளங்கும், பெருஞ் சிறப்பு வாய்ந்த குற்றாலம் திருஞான சம்பந்தர் பருகி யனுபவித்த காட்சி யின்பங்களோடு நம் கண்முன் வந்து காட்சியளிக் கின்றது. இது மட்டுமா!

இயற்கை மணம் சொரியும் மலைச்சாரல், உள்ளது உள்ளபடி நம் கண்க ளுக்குப் புலனாகிறது. நீண்டுயர்ந்த கருங் குன்றம் கம்பீரமாக நிமிர்ந்து நிற் கின்றது. இயற்கை யின்பம் பொழியுஞ் சோலை, யாழ்போல் முரலும் நீலநிற வண்டுகளோடு வளர்ந்தோங்கும் காட்சி, குன்றிய உள்ளத்திற்கு ஓர் சாதனம் என்று கூறின் தவறாகுமா? மற்றுமோ ரிடத்தில்,

"மலையார் சாரல் மகவுடன் மந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்தும் குற்றாலம்"

என்று பாடும்பொழுது, மலைச்சாரலின் அருகேயுள்ள தோப்பின் வாழைப்பழக் குலைகளும், அக் குலைகளைக் கவர்ந்து தம் குட்டிக்குக் கொடுத்துத் தானும் தின்று மகிழும் தாய்க் குரங்கு ஒன்றின் தன்மை, சம்பந்தருடைய கண்களுக் குப் பன்னிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்தோன்றியது போலவே இன்றைக் கும் நம் கண்ணெதிரே தோன்றுகின்றது. இவ் வின்பத்தை இயற்கை யின்பம் என்று கூறுவதில் வியப் பொன்றுமில்லை யல்லவா?

இதே போன்று சிலப்பதிகார ஆசிரியர் விலைமாதர்களுக்கும், கற்புக் கரசிக ளுக்கும் உள்ள தாரதரங்களை விளக்கிக் கூறும்பொழுது ஓர் இயற்கைக் காட் சியை உவமையாக அளிக்கின்றார்.

மலையிடைப் பிறந்த ஓர் ஆறு அணிபெற அழகுற நடந்து செல்வதா கவும், அதன் மருங்கே முளைத்தெழுந்த ஓர் வேங்கை மரமானது விண்ணளாவி விளங்குவதாகவும், அதன் பொன் போன்ற பூக்களில் தீம் தேனுண்டு வண் டுகள் மகிழ்வனவாகவும், அவ் வேங்கையைச் சுற்றி ஓர் பைங்கொடி பின்னிப் படர்ந்து நிற்பதாகவும், அத் தருணத்தில், ஒரே கொந்தளிப்பு; சுழற்காற்று;

திரண்ட வெள்ளம்; வேங்கை மரம் அவ் வெள்ளத்தில் சாய்ந்தது. வண்டுகள் பறந்து சென்று அயல் மரங்களை நாடின. வேங்கையைச் சுற்றி யிருந்த பைங் கொடி அதனோடே வெள்ளத்தில் மறைந்தது, என்றும் கூறி அவ் வேங்கையை ஓர் தலைமகனுக்கும், பைங்கொடியை ஓர் தலைவிக்கும் அவ் வண்டுகளை விலை மாதர்களுக்கும் ஒப்பிட்டுக் கூறும்பொழுது இணையில்லா இயற்கை யின்பம் நம் மனமாரப் பருகி நல்லின்பம் துய்க்கவேண்டி வருகிறது.

இதே போன்று திரு ராகவையங்கார் அவர்கள் இயற்றிய பாரி காதை யிலே, தேர்முல்லைக் கீந்த திறத்திலே அவர்

"தேன்தன் துளிசிதறித் தென்றல் அடிவருட
மாந்து மண மெதிர வண்டிசைக்க—கூந்தல்
மயிலாடக் கிள்ளை மகிழ்மிழற்றப் புக்கான்
அயிலாடல் வேள் கான் அகத்து."

என்று இயற்கையின் வருணனை கொண்டு தேன் துளியானது நாவில் இன் சுவையையும், தென்றலானது சரீரத்திற்கு இனிய உணர்ச்சியையும், மண மானது மூக்கிற்கு நல்ல வாசனையையும், மயிலானது கண்ணுக் கினிய நடனக் காட்சியையும், கிளியானது மனதிற்கினிய இன்சொற்களையும் கொடுத்து மக்களிற் சிறந்தவனாகிய பாரிக்கு மக்களுக் குரிய அறுவகை யறிவிற்கும் இன்ப சுகத்தைக் கொடுத்து வரவேற்குந் தன்மையோடு அக் கானகம் விளங்கியதாக கவி குறித்துள்ள இன்பம் இணையிலா உவகை யளிப்பதாகும்.

இவ்வாறு இயற்கையினூடே பெறும் இன்பங்களை கவிதைகளின் வாயி லாய் உதாரணங்கள் மூலம் எடுத்துக் கொடுத்துக்கொண்டே போகலாம். ஆனால் இத்தகைய பலவேறு அழகுகளையும், கவிகளின் இதர அழகுகளையும் இம்மாதிரி பெறும் இன்பங்களையும் ஒருவர் எடுத்துக் காட்டுவதை விட வாச கர்கள் ஒவ்வொன்றிலும் ஊன்றிப் பார்த்து இன்பம் அனுபவிப்பார்களாயின், பாடல்களின் இசை யின்பத்தோடு, இயற்கை யின்பமும், இயற்கை யின்பத் தோடு பக்தி யின்பமும், பக்தி யின்பத்தோடு கவி யின்பமும், கவி யின்பத்தோடு தமிழின்பமும் சங்கமமாகி அயர்ந்த உள்ளத்தின் ஒரு தாகத்தை அடக்கி, ஆனந்த மருளும் ஓர் அருவியாக எண்ணி இன்பசாகரத்தில் மூழ்குவார்கள்!

மாலை நேரம்! சூரியன் மேற்றிசையில் சாய்கின்றான்! குதூகலமான காற்று! பட்சிகளின் பண்ணமைந்த பாடல்கள்! ஒரு புறம் பச்சைப் பசே லெனத் துவங்கும் புற்றரைக் காட்சி! மற்றொரு புறம் கன்னங்கருமை; வெள்ளை வெண்மை; நீல வானம் அதன் பக்கல் முழுதும் கலந்த ஓர் தன்மை அப் பெருங்காட்சியை எச் சொல்லால் சொல்வது? எவ் வெழுத்தால் எழு! துவது?

இயற்கையின் உள்ளுறை, அழியா அழகு மாறா இளமைக் கோலத்துடன் கலைகள் வாயிலாகவும், காவியங்கள் வாயிலாகவும், ஓவியங்கள் வாயிலாகவும், பிறவாயிலாகவும் இன்பத்தைத் திரட்டித் திரட்டி நமக்கு வழங்கிய பெரியோர் கட்கு என்ன கைம்மாறு செலுத்த வல்லேம்!

பார்வைக்கு வந்தவை

மூர்த்தி ஜோதிஷ போதினி

மேற்கண்ட புத்தகம் ஒன்று வரப் பெற்றோம். இதில் இவ்வருஷத்திய கோசார பலன்கள் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. வருஷப் பலனும், வாரப் பலனும், கிரஹ தோஷ பரிகாரமும், விவாஹ விஷயங்களும், விஷு வருஷத்திய ஜெகத் ஜாதக பலன்களும் அடங்கி யிருக்கின்றன. இச்சிறு புத்தகம் எல்லோருக்கும் உபயோகமா யிருக்கும் என நம்புகிறோம்.

கிடைக்குமிடம்: மூர்த்தி ஜோதிஷ சாலா,
டவுன் ஸ்டேஷன் ரோடு, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.

டாக் எ டோன் (Talk A Tone)

'டாக் எ டோன்' என்ற சினிமா வருஷ மலர் வரப் பெற்றோம். இது பார்வைக்கு வசீகரமாயும், அழகாகவும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. முகப்பில் பிரபாத் 'பதோவலி'யில் நடிக்கும் அனிஸ் ஊஞ்சலாடுகிறாள். இதைத் தவிர உள்ளே நம் நாட்டு நடிகை, நடிகர் படங்களும், மேல் நாட்டு நடிகை, நடிகர் படங்களும் ஆர்ட் பேப்பரில் திகழ்கின்றன. பத்திராதிபர், காகிதக் கஷ்டத்தை யும் பாராமல், இவ்வழகிய மலரைக்கொண்டு வந்ததற்கு மிகவும் பாராட்டுகிறோம்.

ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை

இப்புத்தகத்தில் எளிய நடையில் ஹிந்துமுஸ்லிம் ஒற்றுமையின் அவசியத்தைப் பற்றியும், பாகிஸ்தான் திட்டத்தினல் முஸ்லிம்களுக்கு நேர இருக்கும் ஆபத்தைப் பற்றியும், குர்ஆன் முதலிய வேதங்களிலிருந்து பல அத்தாட்சிகளை எடுத்துக் காட்டி விளக்கியிருக்கிறார் ஜனப் மஆலி சாஹிப். நம் தமிழ் நாட்டிலுள்ள ஹிந்து-முஸ்லிம் சகோதரர்கள் இப்புத்தகத்தை அவசியம் படிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். விலை அணு 8.

கிடைக்குமிடம்: லோகசக்தி பிரசுராலயம்,
21-A, சௌத் கூவம் ரோடு, மௌண்ட் ரோடு போஸ்ட், மதராஸ்.

ஆனந்த போதினி பஞ்சாங்கம்

இப்பஞ்சாங்கம் வரப்பெற்றோம். இது கணித சாஸ்திரீய முறையில் கணிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை 2 அணு. எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். தபாலில் விரும்புவோர்கள் 0—3—3 ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

கிடைக்குமிடம்: ஆனந்த போதினி ஆபீஸ்,
நெ. 6, லாயர் சின்னத் தம்பி முதலித் தெரு, ஜி. டி. மதராஸ்.

சந்திரோதயம் "பொது அறிவு"ப் போட்டிகளின் வரவு, செலவு கணக்கைப் பரிசீலனை செய்த

ஆடிட்டரின் சர்டிபிகேட்

T. S. VISVANATHAN, G. D. A., R. A.
REGD ACCOUNTANT & AUDITOR.

28, MOTILAL ST.,
THYAGARAYANAGAR.
(MADRAS)

31st March' 1941.

AUDIT CERTIFICATE.

This is to certify that I have examined and checked the account books, vouchers and other records and documents relating to the "CHANDROTHAYAM" CROSS-WORD COMPETITIONS," from 15-3-1940 to 30-3-1941, that the amounts of the Entrance fees are properly accounted for in the said accounts and that the payments to the winners of the Competitions are properly and correctly made and are supported by necessary receipts and vouchers. The accounts and records, in my opinion, are kept satisfactorily and up to date.

T. S. Visvanathan G.D.A., R.A.,
Registered Accountant and Auditor.
31-3-1941.

(மொழி பெயர்ப்பு)

நான் சந்திரோதயம் போட்டிகள் சம்பந்தமான வரவு செலவு கணக்குகளைப் பரிசீலனை செய்ததில் 15-3-1940 முதல் 30-3-1941 வரை போட்டிக்கு வசூலான பிரவேசக் கட்டணங்களின் கணக்கும், பரிசு பெற்றவர்களுக்கு அனுப்பப்பட்ட பரிசுத் துகைக்கு ரசீதும், மற்ற வவுச்சர்களும், சரியானபடி கணக்கு வைக்கப்பட்டிருக்கிறதென்பதும், மேற்படி கணக்குகள் நாளிது தேதி வரையில், ஒழுங்காகவும், திருப்திகரமாகவும் இருக்கின்றன என்பதும் எனது அபிப்பிராயம்.

(Sd.) டி. எஸ். விஸ்வநாதன், ஜி. டி. ஏ., ஆர். ஏ.,
ரிஜிஸ்டார்டு அக்கவுண்டண்டு & ஆடிட்டர்
31—3—1941

ஸ்பெஷல் பரிசு

சந்திரோதயம்

"பொது அறிவு"ப் போட்டி—87

முடிவு தேதி **17-5-1941** சனிக்கிழமை

பிரவேசக் கட்டணம் ஒரு கூபனுக்கு அணா 4.

ஒரு ரூபாய்க்கு ஐந்து கூபன்கள் அனுப்பலாம்.

போட்டியின் சரியான விடை ஸீல் போட்ட கவரில் சென்னை,

ஸெண்ட்ரல் பாங்கியில் டெபாஸிட் செய்யப்பட்டிருக்கிறது.

விடைகள் கண்டுபிடிக்க வேண்டிய விதம்:

வெள்ளைக் கட்டங்களில் தரப்பட்டிருக்கும் எண்களைப் பாருங்கள்! ஒவ்வொன்றிலிருந்து இடமிருந்து வலமாகவோ, அல்லது மேலிருந்து கீழாகவோ வார்த்தைகள் ஆரம்பிக்கின்றன. ஒரு எண்ணிலிருந்து ஆரம்பிக்கும் வார்த்தை எப்பக்கமாகச் செல்லுகிறதோ அப்பக்கத்திலுள்ள கறுப்புக் கட்டத்தின்முன் அது முடிவடையும். ஒவ்வொரு வெள்ளைக் கட்டத்திலும் ஒவ்வொரு எழுத்துத்தான் எழுதலாம்.

உதாரணமாக, நெ. 1–க்கு இடமிருந்து வலமாக ஒரு குறிப்பு இருக்கிறது. மேலிருந்து கீழாக ஒரு குறிப்பு இருக்கிறது. ஆகவே நெ. 1 கட்டத்தில் போடப்படும் எழுத்து அந்த இரு குறிப்புகளுக்கும் சரியான வார்த்தைக்கேற்ற முதலெழுத்தாக இருக்க வேண்டும். முதற் குறிப்பு (இடமிருந்து வலமுள்ளது) **இந்தப் போட்டிக்கு இது ரூபாய் இருபத்தையாயிரம்** என்றிருக்கிறது. நெ. 1 கட்டத்திலிருந்து இடமிருந்து வலமாக **மூன்று** வெள்ளைக் கட்டங்களிருக்கின்றன. ஆகவே நெ. 1 குறிப்பிற்குச் சரியான வார்த்தை **மூன்று** எழுத்துக்கள் கொண்டது என்பது தெரிகிறது. **பரிசு** சரியான விடை. ஒரு வெள்ளைக் கட்டத்திற்கு ஒரு எழுத்து வீதம் எழுதப்பட்டிருக்கிறது.

அடுத்தாற்போல் நெ. 1 மேலிருந்து கீழ்க்குறிப்பைப் பாருங்கள்! அதற்கு விடை **ப** என்னும் எழுத்தில் ஆரம்பிப்பதாக இருக்க வேண்டும். **பதுமை** என்ற விடை சரியாக அமைகிறது.

இம்மாதிரியே எல்லா விடைகளையும் கண்டு பிடித்து அந்தந்தக் கட்டங்களிலேயே எழுதி அனுப்ப வேண்டியது, அடித்தல், திருத்தல்கள் அங்கீகரிக்கப்படமாட்டாது.

"பொது அறிவு"ப் போட்டி 87—குறிப்புகள்

இடமிருந்து வலம்

1 இந்தப் போட்டிக்கு இது ரூபாய் இருபத்தையாயிரம்.

3 உயர்ந்த விஷயங்களொன்றும் இவனுக்குத் தெரியாது.

5 கண்டிப்பான பேர்வழிகள், பிச்சை கேட்பவனை......என்று சொல்வார்கள்.

6 இதைத் தின்று ஜீவிப்போரும் இருக்கிறார்கள்.

7 தந்திரத்தில் தலைசிறந்த பிராணி.

8 நடு.

9 நன்மைக்கு எதிர்மறையானது.

13......இல்லாது செய்யப்படும் வேலை பெரும்பாலும் உருப்படுவது இல்லை.

14 கண்மணி.

15 "...........இருக்க வால் ஆடுமோ?"

16 இந்தக் காலத்தில் கிராம வாசம் சௌகர்யமாயிருக்கும்.

17 இதில் நாம் வசிக்கிறோம்.

19 இது நாட்டில் அதிகமானால் மக்கள் நிம்மதியாக வாழ முடியாது.

22 இதில் தைரியமாகப் பேசுவதற்கு அனுபவம் வேண்டும்.

25 சிரங்கிற்குப் போடுவார்கள் இதை.

27 இது செய்பவன் இதை அனுபவிப்பான்.

28 பிரணவம்

29 மகாவிஷ்ணுவுக்குப் பிரீதியானது.

மேலிருந்து கீழ்

1 சித்திரப் பாவை.

2 வாழ்க்கையில் இதுவும், துக்கமும் கலந்தே வரும்.

4 "........வை யொருநாளும் மறக்க வேண்டாம்"

5 நம்முடைய சுய........யை விட்டுக் கொடுத்தல் கூடாது.

7 "......மறப்பது நன்றல்ல"

10 ஸ்ரீராமனின் தர்ம பத்னி.

11 எல்லாரும் இதை எளிதாகப் பாடிவிட முடியாது.

12 இதில் தனியாக அகப்பட்டுக் கொண்டவன் மீளுதல் சிரமந்தான்.

13 மாட்டை ஓட்டிச் செல்வதற்கு உபயோகப்படும்.

15 நல்ல காரியத்தைத்........ செய்வது விரும்பத் தக்கதன்று.

18 சரியான இது சொல்லும் கடையில் வியாபாரம் நன்றாக நடைபெறும்.

19 பலர் இது செய்து தண்டனையை அனுபவிக்கிறார்கள்.

20 இது இல்லாதவனிடம் உதவியை எதிர்பார்ப்பதால் பலனுண்டோ?

21 குளிர்ந்த பிரதேசம் பார்ப்பதற்கு இப்படியாக இருக்கும்.

23 ஒரு முனிவர்.

24 இது செய்வதென்றால் பணம் நிறையச் செலவாகும்.

26 நூதனமான.

'பொது அறிவு'ப் போட்டி—87

முடிவு தேதி 17—5—1941 சனிக்கிழமை

இந்தப் "பொது அறிவு"ப் போட்டி 87-ல் கலந்து கொள்வதில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதென்றும், சட்டப்படி கட்டுப் படுத்துவதென்றும் ஒப்புக் கொள்கிறேன்.

முழுப்பெயர்

ஊர்

ஜில்லா

கூபன் நெ...............

போட்டி நிபந்தனைகள்

(1) ஒவ்வொரு விடைக்கும் பிரவேசக் கட்டணம் அணு 4. பிரவேசக் கட்டணததை மணியார்டர் மூலம்தான் அனுப்பவேண்டும். ஒரு ரூபாய்க்குக் குறைந்து கூபன்கள் அனுப்புவோர் பிரவேசக்கட்டணத்தை தபால் தலைகளாகவும் அனுப்பலாம். சந்தாத் தொகை முதலிய வேறு எதுவும் இந்த மணியார்டருடன் சேர்த்து அனுப்பக்கூடாது. அந்தந்தப் போட்டிக்குத் தனித்தனி மணியார்டராக அனுப்ப வேண்டுமே யல்லாது ஒரே மணியார்டரில் ஒரு போட்டிக்கு மேற்பட்ட போட்டிகளுக்கு பிரவேசக் கட்டணத் தொகைகள் அனுப்பக்கூடாது.

உள்ளூர் வாசிகள் போட்டி முடிவு தேதியன்று மாலை 6-மணிக்குள் சமதாபீசிலுள்ள கவுண்டரில் கூபன்களைக் கவரில் அடக்கம் செய்து, கூபன் எண்ணிக்கையும் விலாசமும் மேல்கவரில் எழுதி பிரவேசக் கட்டணத்துடன் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

(2) ஒருவர் எத்தனை கூபன்களேனும் ஒரே கவரில் அனுப்பலாம் ஆனல், ஒவ்வொரு கூபனுக்கும் பிரவேசக் கட்டணம் அணு நான்கு செலுத்துவதுடன் பணம் அனுப்பியதற்கு அத்தாட்சியாக மணியார்டர் ரசீதும் சேர்த்து விடையுடன் அனுப்பவேண்டும்.

மணியார்டர் ரசீது இல்லாமல் வரும் கூபன்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டா தென்பதை நேயர்கள் நன்கு கவனிக்க வேண்டும். மணியார்டர் கூபனிலும் விடையனுப்பும் கவர்மேலும் போட்டியின் நம்பரையும், அனுப்பப்படும் கூபன்களின் மொத்த நம்பரையும் எழுதவேண்டும். விடை கூபனிலும் மணியார்டர் கூபனிலும் விடை அனுப்புபவரின் பெயரும், முழு விலாசமும் தெளிவாக எழுதவேண்டும்.

(3) ஒன்றுக்கு மேற்பட்ட கூபன்கள் அனுப்புகிறவர்கள் கூபன்களில் வரிசைக் கிரமமாக நம்பர் போடவேண்டும்.

(4) விடைக் கூபன்களை மையினல் தெளிவாக எழுதியனுப்ப வேண்டும். பென்சிலால் எழுதப்பட்ட கூபன்களும், கிழிந்த கூபன்களும், அடித்தல், திருத்தல்களும் அங்கீகரிக்கப்படமாட்டாது.

(5) விடைகள் முடிவு தேதிக்குள் வந்து சேரும்படி அனுப்பவேண்டும். முடிவு தேதிக்குப் பிறகும், அல்லது முடிவு தேதியில் குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகும் வந்து சேரும் விடைகள் கவனிக்கப்படமாட்டாது.

(6) போட்டி ஆசிரியரின் விடைக்கு எழுத்துக்கு எழுத்து சரியான விடை அனுப்புபவருக்கு முதற் பரிசும், அடுத்தபடி சரியாயிருக்கும் விடை அனுப்புபவருக்கு இரண்டாவது பரிசும் முறையே மூன்ருவது பரிசும் அளிக்கப்படும். ஒன்றுக்குமேல் சரியான விடைகள் வந்தால் பரிசுத்தொகை பகிர்ந்தளிக்கப்படும். எவருமே சரியான விடை அனுப்பாவிட்டால் கூடுமானவரையில் சரியான விடை அனுப்புபவருக்கு முதற்பரிசும், மற்றப் பரிசுகள் இதே முறையிலும் அளிக்கப்படும். ஒவ்வொரு தவறுள்ள வார்த்தையும் ஒரு பிழையாகக் கருதப்படும்.

ஏதாவது ஒன்று அல்லது பல கட்டங்களை எழுதாமல் விட்டுவிட்டால் பூராக்கூபனும் நிராகரிக்கப்படும். பரிசளிக்கும் விஷயத்தில் போட்டி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. இந்தப் போட்டியில் முதற்பரிசு பெறுபவருக்கு மற்றப் பரிசும் பெற உரிமையுண்டு. ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்ட முதற் பரிசும் பெறலாம்.

(7) போட்டியின் தீர்ப்பு சம்பந்தமாக யாதொரு விதமான கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளப்படமாட்டாது.

(8) சந்திரோதயம் காரியாலயத்திலும், அதனோடு சம்பந்தப்பட்ட பிற காரியாலயத்திலும் உள்ளவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(9) கூபன்கள் தபாலிலோ மற்றெவ்விதமாகவோ தவறிவிட்டால் அதற்குப் போட்டி ஆசிரியர் எவ்விதத்திலும் ஜவாப்தாரியாகமாட்டார். ஒருவர் பணம் அனுப்பி யிருக்கலாம். ஆயினும் அவர் அனுப்பிய கூபன் எமக்கு வந்து சேராமல் வழியில் தவறியிருப்பின் அதற்காக நாம் ஜவாப்தாரியாக மாட்டோம். போட்டி சம்பந்தமாக அனுப்பப்படும் தொகை எக்காரணங் கொண்டும் திருப்பி யனுப்பப்படமாட்டாது.

(10) இப்போட்டியில் அளிக்கப்படும் பரிசுத் தொகையை வேறு கணக்கிற்கு மாற்றுவதோ அல்லது வேறு போட்டிக்குக் கட்டணமாக ஈடு செய்வதோ முடியாது.

(11) போட்டிக்காக ஒருவரனுப்பும் கூபன்களின் எண்ணிக்கைக்கு அவர்களனுப்பும் பிரவேசக் கட்டணத் தொகை தகுந்த ருஜுவாகக் கருதப்படமாட்டாது. இப்போட்டி சம்பந்தமாகப் போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதும் சட்ட பூர்வமாகக் கட்டுப்படுத்துவதுமாகும். இந்த நிபந்தனைகளுக் குட்பட்டுத்தான் நேயர்கள் சந்திரோதயம் போட்டிகளில் பிரவேசிக்கவேண்டும்.

(12) ஒரு போட்டி சம்பந்தமாய்ச் செய்யப்படும் உரிமைகள் (Claim) அப்போட்டி முடிந்த தேதியிலிருந்து இருபது நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும். பிறகு செய்யப்படும் உரிமைகளோ அல்லது முடிவு சம்பந்தமான விபரமறிய வேண்டிய வேண்டுகோள்களோ கவனிக்கப்படமாட்டா. இருபது நாட்களுக்குப் பிறகு அப்போட்டி சம்பந்தமானவைகள் யாவும் அழித்து விடப்படும்.

(13) மேலே கண்ட நிபந்தனைகளுக்குப் புறம்பாக உள்ள எந்தக் கூபனும் அங்கீகரிக்கப்பட மாட்டாது.

போட்டியில் உபயோகித்துள்ள வார்த்தைகள் ஆனந்த விகடன் சித்திரப் போட்டி அகராதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.

'பொது அறிவு'ப் போட்டி—87

முடிவு தேதி 17—5—41 சனிக்கிழமை

இந்தப் "பொது அறிவு"ப் போட்டி 87-ல் கலந்து கொள்வதில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதென்றும், சட்டப்படி கட்டுப் படுத்துவ தென்றும் ஒப்புக் கொள்கிறேன்.

முழுப் பெயர்

ஊர்

ஜில்லா

கூபன் நெ...............

'பொது அறிவு'ப் போட்டி—87

முடிவு தேதி **17—5—1941** சனிக்கிழமை

இந்தப் "பொது அறிவு"ப் போட்டி 87-ல் கலந்து கொள்வதில் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதென்றும், சட்டப்படி கட்டுப் படுத்துவ தென்றும் ஒப்புக் கொள் கிறேன்.

முழுப்பெயர்

ஊர்

ஜில்லா

கூபன் நெ..............

'பொது அறிவு'ப் போட்டி 84—முடிவு

இரண்டாவது பரிசு ரூ. 2000

ஒரு தப்புள்ள விடை யனுப்பிய கீழ்க் கண்ட 615 பேர் கட்கும் இரண்டாவது பரிசுத் தொகை ரூ. 2000–மும் சமமாகப் பங்கிடப்பட்டுத் தலைக்கு ரூ. 3—4—0 வீதம் பரிசளிக்கப் பட்டிருக்கிறது.

